ஓம்

# ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

2-JUL 1926
MADRAS

இது

'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும்

பொதுநிலைக்கழகத்தின்

அரிய பெரிய செந்தமிழ்விளக்க வெளியீடு

பதுமம், ௧௩.] அக்ஷய ௵ ஆனி, ஆடி ௴ [இதழ்கள், ௧, ௨.

## பொருளடக்கம்

மாணிக்கவாசகர் காலம், மூன்றாம்பகுதி.
(The Age of Saint Manickavachakar, the third part—reviews all the arguments that have appeared for the last 16 years and finally fixes his age in the third century A. D.) (12-ஆம்பதுமத் தொடர்ச்சி)

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம்அவர்கள்,
சமரச சன்மார்க்க நிலையகுரு,
பல்லாவரம்

பல்லாவரம், சமரசசன்மார்க்க நிலையத்தின்கண் உள்ள
டி. எம். அச்சுக்கூடத்திற்
பதிப்பிடப்பட்டது;

26th June, 1926.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

## ஞானசாகரப் பதின்மூன்றாம் பதுமக் கையொப்பத்தொகை முன் அனுப்பிய அன்பர்கள்

ஞானசாகரப் பன்னிரண்டாம் பதுமத்தின் கக, கஉ-ஆம் இதழ்களில் யாம் தெரிவித்ததற்கு இணங்கிப் பதின்மூன்றாம் பதுமக் கையொப்பத்தொகையைக் கீழ்க்குறிப்பிட்ட அன்பர்கள் முன் அனுப்பி உதவி புரிந்தார்கள். அவர்கள் செய்த அவ்வுதவியை யாம் பெரிதுபாராட்டி, அவர்கட்கு எல்லா நலங்களும் பெருகும்படி இறைவனை வேண்டுகின்றேம்.

திருவாளர் T. S. பிள்ளையவர்கள், பி. ஏ., இரங்கூன்.
,, ராவ்சாகிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், G. B. V. C., வெள்ளகால்.
,, S. சிவசுப்பிரமணியபிள்ளை யவர்கள், வடிவீசுவரம்.
,, G. குழந்தைசுவாமி யவர்கள், காரைக்கால்.
,, மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள், திருநெல்வேலி.
,, K. S. P. கோடிலிங்கம் அவர்கள், கும்பகோணம்.
,, T. வீரபாகுபிள்ளை அவர்கள், திருநெல்வேலி.
,, A. தம்பையா அவர்கள், கோலாலிபிஸ்.
,, S. மாணிக்கம் அவர்கள், கோலாலிபிஸ்.
,, ப.தி.சோ.குமாரசாமிசெட்டியாரவர்கள்,கும்பகோணம்

## பொருளுதவி செய்தார்க்கு நன்றிகூறல்

இலங்கை மாத்தளையில் வழக்கறிஞராயுள்ள திருவாளர் C. அரிய நாயகம்பிள்ளை யவர்கள் பத்தாண்டுகளுக்கு மேலாக நமக்கு இடையிடையே பொருளுதவிசெய்து, எம்முடைய நூற்பதிப்புச் செலவுகளுக்கு யாம் முட்டுப்படாவண்ணம் பேருதவியாற்றிவருதலை எம்முடைய ஞானசாகரத்தின் வாயிலாகவும், நூல்களின் வாயிலாகவும் பலகால் தெரிவித்து வந்திருக்கின்றோம். அப் பேருதவியாளர் இப்போதும் நமது சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் என்னும் நூலின் இரண்டாம்பதிப்புச் செலவுக்கு இருநூற்றைம்பதுரூபா உதவி செய்தருளினார்கள். அவர்கள் தம் அன்புறு குடும்பத்தோடு இன்புற வாழ்ந்து எல்லாநலங்களும் இனிதின் எய்துகவென்று எல்லாம்வல்ல இறைவனைவேண்டி வாழ்த்துவதன்றி அவர்கட்கு வேறு யாது கைம்மாறு செய்யவல்லேம்!

மறைமலையடிகள்.

## மாணிக்கவாசகர் காலத்தில் ஒரு பிழைதிருத்தம்

'மாணிக்கவாசகர் காலம்' 67-ஆம் பக்கத்தின் ஈற்றில் உள்ள "கைலைபாதி காளத்திபாதி யந்தாதி, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்கை, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் முதலிய நூல்வகைகள் கி-மு முதல்நூற்றாண்டின்கண் இருந்த நக்கீரராலும்" என்னும் வரிகள் பிழைபடுகின்றமையின், அவ்வரிகளை அடித்துவிடுக.

## ஒரு குறிப்பு

13-ஆம் பதுமத்தின் இம் முதல் இரண்டிதழ்களில் வரவேண்டிய 48 பக்கங்களுக்கு இப்போது 40 பக்கங்களே வந்துள்ளன. இவற்றிற் குறையும் 8 பக்கங்களும் 3, 4-ஆம் இதழ்களிற் சேர்த்து நிறைவுசெய்யப்படும்.

"ஓ ஓ உவமன் உறழ்வின்றி ஒத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெல்லாங் கீழ்மேலாய்
ஆவுதை காளாம்பிபோன்ற புனல்நாடன்
மேவாரை அட்ட களத்து" (களவழி, ௩௬) என்னுஞ்

செய்யுளையும் இதனோடு ஒத்தவற்றையும் பாக்களின் பொருட்சுவை தேர்ந்த புலவோர் பொருட்சுவை இல்லாதன வென்று உரைக்கத் துணிவரோ கூறுமின்கள்!

அற்றன்று, பொய்கையாழ்வார்தம் செய்யுட்கள் கடவுள் மேற்பாடப்பட்டிருத்தலின் அவையே இனிமையுடையன, மற்றக் 'களவழிச்' செய்யுட்களோ போர்க்களத்தின்மேற்பாடப்பட்டிருத்தலின் அவை இன்னாதனவேயாமென்று கோடலே எமது கருத்தாமாலெனின்; நன்று சொன்னீர், கடவுளின்மேல் நெஞ்சுருகிப்பாடும் பாக்கள் இனிமையிற் சிறந்துநிற்றல் போலவே, கடவுள் உயிர்கள்மேல் வைத்த பேரிரக்கத்தால் அவைகட்குப் புல்முதல் மக்கள் ஈறான உடம்புகளையும், அவ் வுடம்புகள் இருந்து உலவுதற்கு இவ்வுலகத்திற் பலவேறு இடங்களையும், அவை ஐம்புலன்களாலும் நுகருதற்குப் பலவகைப் பண்டங்களையும் மக்களெவரானும் படைக்க இயலாத அத்துணைத் திறமையோடும் அழகோடும் படைத்துக் கொடுத்திருத்தலின், அவனது அப்படைப்பின் திறங்களையும், அப்படைப்பின்கண் மக்களுடைய செயல்களால் நிகழும் நிகழ்ச்சி வேறுபாடுகளையும் எடுத்துப்பாடுதல் கடவுளைப் பாடுதலோடொப்ப இன்பம் பயப்பனவேயாம். அங்ஙனம் அல்லாக்கால் 'அகப்பொருள்,' 'புறப்பொருள்' பற்றி யெழுந்த சங்கப்பாட்டுகளும், 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' போன்ற பெரும்பொருட்டொடர்நிலைச் செய்யுட்களும் சான்றோரால் அத்துணை விழுமியவாய்ப் பாராட்டப் படாவன்றே. ஆதலால், இறைவனைப் பாடும் பாட்டுக்களை யன்றி, இறைவனது படைப்பினையும் அப்படைப்பில் நிகழும்

நிகழ்ச்சிகளையும் புனைந்துரைக்கும் பாக்களும் நல்லிசைப் புலவர்களால் ஆக்கப்படின் அவற்றோடொப்ப இனிமை மிக்கனவாயே திகழுமென உணர்ந்துகொள்க. அற்றாயினும், 'களவழிச்' செய்யுட்கள் போர்க்களத்தில் நிகழ்ந்த கொடிய நிகழ்ச்சிகளைக் கூறுதலின், அவை இன்னாதனவேயாமெனிற்; குருதி பொழுகக், குடருந் நிணமும் மூளையுஞ் சிதற, நெஞ்சம்போழப் பட்டுங் கழுத்து அறுபட்டுங் கைகால் முறிபட்டுங் கிடப்ப, இறைவனருளால் அரிதிற்கிடைத்த மக்கள்யாக்கையை மக்கள் தாமே ஒருவரோடொருவர் பொருது அழிக்குங் கொடுமை, போர்க்கள நிகழ்ச்சிகளை எடுத்துப் பாடும் பாட்டுக்களானன்றி, மற்றையோர்க்கு வேறொருவாற்றானும் புலப்படமாட்டாது. மற்று, அப் போர்க்களப் பாட்டுக்களைக் கேட்டவளவானே அவர் அப் போர்த்தொழிலின் கொடுமை தேர்ந்து, உள்ளம் இளகி அத்துணைத் தீய தொழில் என்றும் நிகழாதிருத்தலை வேண்டுவர். நல்லிசைப் புலவராகிய பொய்கையார் 'களவழி' பாடிய நோக்கமுங், கோச்செங்கண்ணன் தான் செய்த போரினால் விளைந்த கொடுமையை நன்குணர்ந்து, இனி அதனை மேற்கொள்ளாதிருத்தற்பொருட்டும், அவனது போரினால் முன்னரே தன் படைகளையிழந்து உள்ளம் நிலைகலங்கிநிற்குஞ் 'சேரமான்கணைக் காலிரும்பொறை' யென்னும் பகைழோங்கிய சிறந்த மன்னனை மீண்டுஞ் சிறையிலடைத்து வருத்துதலினும் மிக்க கொடுமை பிறிதில்லையென்பதனை அப் போர்க்களக்கொடுமை பாடிய பாட்டின் வழிப்புகுந்துணர்ந்து அவனைச் சிறையினின்றும் அவன் விடுதலை செய்தற்பொருட்டுமே யாம். பொய்கையார் பாடிய 'களவழி' நூலாற் போரின்கொடுமை தெரிந்த பின்னர்த்தான், சோழன் கோச்செங்கண்ணன், போர்செய்து பிறர்மண் வெளவுதலை அறவே கைவிட்டுச், சிவபெருமானுக்குத் திருவடித்தொண்டனாகி, அப் பெருமானுக்கு ஆங்காங்குத் திருக்கோயில்கள் கட்டுவித்து, அத் திருத்தொண்டிலேயே இன்புற்றிருந்தானாதல் வேண்டும். இன்னும், இறைவனால் வகுக்கப்பட்ட அழகிய

அமைதிமிக்க இயற்கையமைப்பில், மக்கள் தமது கொடுஞ்செயலால் உண்டாக்குங் கொடிய போர்க்கள நிகழ்ச்சிகளை எடுத்துப் பாடுவான் புகுந்த ஆசிரியர் பொய்கையார், அக்கொடியவற்றின் தோற்றக் கொடுமையைத் தணிவுசெய்தற் பொருட்டும், தாம் பாடுஞ் செய்யுட்களைப் பயில்வாரது நினைவு அக்கொடுநிகழ்ச்சிகளின் வழியே ஈர்ப்புண்டுபோகாமல் அவற்றினின்றும் பிரிந்து இறைவன் அமைத்த அழகிய இயற்கைத்தோற்றங்களிற்சென்று பதிந்து அவற்றை வியந்து இன்புற்று நிற்றற்பொருட்டும், தாம் பாடும் அப் போர்க்கள நிகழ்ச்சிகள் பெரும்பாலனவற்றிற்கு இயற்கைத் தோற்றங்கள் பலவற்றை உவமையாக எடுத்துக் காட்டிச் செல்லுதல் பெரிதும் பாராட்டற்பால தொன்றாம். போர்க்களத்திற் குடைகள் காம்பு மேலாகக் கிடத்தலுக்குத் தண்டுமேலாகக்கிடக்குங் காளான்களை உவமைகூறிய பாட்டை மேலே எடுத்துக்காட்டினும்; இங்ஙனமே ஏனைச் செய்யுட்களிற் பெரும்பாலனவும் இயற்கைத்தோற்ற உவமை காட்டுதல்காண்க. இவ்வாறு பெருங்காப்பியங்களுள்ளும் அடுத்தடுத்துக் காணப்படாத இயற்கைத்தோற்ற உவமைகளை, நாற்பத்தொரு செய்யுட்களான் அமைந்த இச்சிறிய 'களவழி' நூலின்கண் அதனாசிரியர் பொய்கையார் அடுத்தடுத்துக் காட்டிச் செல்லுதலின் கருத்தை நுனித்துக் காணவல்ல அறிவுமதுகையுடையார், அங்ஙனம் அவ் வாசிரியர் செய்தது, தமது நூலைப் பயில்வார்க்கு அவர்தம் நினைவு தாங் காட்டும் அப்போர்க்களக் கொடுங்காட்சிகளிலேயே கிடந்துவிடாது, அவற்றைக் கடந்துசென்று இறைவன்வகுத்த இயற்கைத்தோற்ற அழகிற் படிதல்வேண்டியேயாமென உணர்ந்துகொள்வர். இத்துணை நுண்ணுணர்வுகொண்டு உருவத்திற் சிறிதாகிய இக் களவழி நூல் யாக்கப்பட்டமையாலன்றோ, திருக்குறள், நாலடியார்முதலான விழுமியநூல்களோடு இதுவும் ஒன்றாகச் சேர்த்துப் பதினெண் கீழ்க்கணக்கினுள் வைத்து ஆன்றோராற் பாராட்டப்படுவதாயிற்று. இங்ஙனமாக நன்மையும் இனிமையும் முதிர்ந்துதிகழுங் 'களவழிப்' பாட்டு

களை இன்னதனவென்று கூறிய அப் புதிப்பூரைகாரரது உரை வழுக்குரையேயாமெனவிடுக்க.

இனிப், பொய்கையாழ்வார் பாடிய முதற்றிருவந்தாதிச் செய்யுட்களெல்லாம் பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற் கடவுண்மேற் பாடப்பட்டனவும் அல்ல. சிவபெருமானையுந் திருமாலையும் இவர் ஒன்றுபடுத்தி அருளிச்செய்திருக்கும் ரு, உஅ, எசு, கூஅ-ஆஞ் செய்யுட்களும், அங்ஙனமே திருமாலைமட்டும் மனமுருகிப் பாடியிருக்கும் வேறுசில செய்யுட்களுந் தவிர ஏனையவெல்லாங் கண்ணன், வாமனன், நரசிங்கன், வராகன் முதலியோர்மேற் பாடப்பட்டனவாகும். பிறப்பு இறப்பு இல்லாத் தனிமுதற் கடவுளைமட்டும் வழிபடுவோரான சான்றோர்க்குப், பிறப்பு இறப்பிற் கிடந்துழல்வாரான மக்களையும் அவரிற் றாழ்ந்த விலங்குகளையும் பாடும் இப் பாட்டுக்கள் அருவருப்பினையும் வருத்தத்தினையும் விளைவியாதிரா. மக்களை மக்களாகவும் தெய்வத்தைத் தெய்வமாகவும் வைத்து மயக்கவுணர்வுக்கு இடனின்றிப் பாடுதல் குற்றம்அன்று; மற்று, மக்களைத் தெய்வமாகவும், தெய்வத்தை மக்களாகவும் பிறழ்த்திவைத்து மயங்கப் பாடுதலே பெரிதுங் குற்றமாவதாம். 'திருமால்' என்பது பிறப்பு இறப்பு இல்லா எல்லாம்வல்ல இறைவியாகிய உமைப்பிராட்டியே யல்லாற் பிறிதன்றென்பதனை முன்னரே விளக்கிக்காட்டினமாதலால், திருமாலைமட்டும் வணங்குதல் குற்றம்அன்று. மற்றுக், கண்ணன், வாமனன், முதலான மக்களைத் தெய்வமாக வைத்தும், முழுமுதற்பொருளாகிய திருமாலைப் பிறப்பு இறப்புக்களுட்படுத்தும் பாடியதே குற்றமாம். ஆகவே, பொய்கையாழ்வார் திருமாலையுஞ் சிவபிரானையும் விடுத்து, ஏனை மக்களுள்ளுஞ் சிற்றுயிர்களுள்ளும் படுவாரான கண்ணன், வாமனன், நரசிங்கன், வராகன், இராமன் முதலியோரைத் திருமாலாக வைத்துப் பாடியதும், உலகிற்கு முழுமுதற்கடவுள் அம்மையப்பரும் அல்லது மாலுஞ் சிவமுமாம் ஒருவரேயாக அவரைவிடுத்து, " முதலாவார் மூவரே " எனப் புராணகதையை நம்பிக்

கடவுளை மூவரெனக் கூறியதும் மெய்யறிவினருக்கு இன்னு தனவாகவே காணப்படும். சைவசமயாசிரியருள் எவரும் இங் ஙனம் வைணவ ஆழ்வார்களைப்போல் யாண்டும் மயங்கிப் பாடிற் றிலர்; அவர்களெல்லாரும் பிறப்பிறப்பில்லாத் தனித்தலைமைக் கடவுளாகிய அம்மையப்பர் ஒருவரையே, மூவர்க்கும் முப்பத்து மூவர்க்கும் மற்றொழிந்த தேவர்க்கும் மேற்பட்டவராக வைத் துப் பாடியிருக்கின்றனரென்பதை மேலே பலகாலும் வற்புறுத் திப் போந்தாம். பொய்கையாழ்வாரும் பேயாழ்வாரும் இடை யிடையே புராணகதைகளான் மயக்குற்றுத், திருமால் அல்லாத வற்றையுந் திருமாலாகக் கொண்டு பாடிப் பிழைபட்டனராயி னும், இடையிடையே அம்மயக்கந்தீர்ந்து மெய்யுணர்வு தெளிந் து சிவபிரானுந் திருமாலுமாய்க் கூடிய முழுமுதற் கடவுளின் ஒருருவினையுந் திருமாலையுங் குழைந்துருகிப் பாடியிருக்கின்றன ராகலின் அவ்விருவரும் எம்மனோராற் பெரிது பாராட்டப்படுந் தகைபரேயா மென்க.

இனி, 'இன்னிலை' பாடிய பொய்கையாரும், 'முதற்றிருவந் தாதி' பாடிய பொய்கையாழ்வாரும் ஒருவரேயென நாட்டுதற்கு அப் பதிப்புரைகாரர் வேறுசில குறிப்புகள் காட்டினார்; அவை தம்மையும் ஆராய்வாம். 'இன்னிலைச்' செய்யுட்கள் சிலவற்றிற் குற்றியலுகரத்தின்பின் வந்த உயிர்கள் உடம்படு மெய் பெற் றிருத்தல்போல, முதற்றிருவந்தாதிச் செய்யுட்கள் சிலவற்றிலுங் குற்றியலுகரத்தின்பின் வந்த உயிர்கள் உடம்படுமெய் பெற் றிருக்கின்றனவென்று அவை இரண்டற்கும் ஒற்றுமை காட்டி னார். இது பெரிதும் பிழைபாடான ஒற்றுமையே யாகும்; எனெனிற், குற்றியலுகரத்தின்முன் வரும் உயிர், அக் குற்றிய லுகரங்கெட நின்ற மெய்யின்மேல் ஏறிவருதலே செய்யுள்வழக் கிலும் உலகவழக்கிலும் இயற்கையாகக் காணப்படுவதொன்றாம். 'எழுந்து இருந்தான்,' 'மருந்து உண்டான்,' "நாகு இள வரி வண்டு உண்டு" என்றற்றொடக்கத்தன இருவகை வழக்கிலும் 'எழுந்திருந்தான்,' 'மருந்துண்டான்,' "நாகிளவரிவண்டுண்டு"

என்றுதான் எல்லாராலுஞ் சொல்லப்படுமேயல்லாமல், 'எழுந்து விருந்தான்,' 'மருந்துவுண்டான்,' "நாகுவிளவரிவண்டுவுண்டு" என உடம்படுமெய் புணர்த்துச் சொல்லப்படா. சொற்களைச் சொல்லுங்காற் குற்றியலுகர ஈற்று உகரங்கெடநின்ற மெய்ம் மேல்வந்த உயிரேறி முடிதலே எங்கும் இயற்கையாகக் காணப் படுதலின், அவ் வியற்கையையே ஆசிரியர் தொல்காப்பியனாரை உள்ளிட்ட இலக்கணஆசிரியர் இலக்கணமாகக் கூறுநிற்பர். குற் றியலுகரத்தின் முன்வரும் உயிர் உடம்படுமெய் பெறுமெனத் தொல்காப்பியனார் யாண்டுங் கூறிற்றிலர். அதனாற், குற்றிய லுகரத்தின் முன்வரும் உயிர் உடம்படுமெய் பெறவைத்தல் இயற்கைக்கும் இலக்கணத்திற்கும் மாறான பிழையேயல்லாமற் பிறிதன்று; பிழையேயாயினும் வெண்பாவினும் பிற பாக்களி னும் முறையே தளையுஞ் சீருங் கொடாமைப்பொருட்டு அவ் வியற்கைக்கு மாறாக அருகி ஒரோவொருகாற் குற்றியலுகரத் தின்முன்வந்த வுயிர்க்கு உடம்படுமெய் கொடுத்து நல்லிசைப் புலவர் செய்யுள் யாத்தலும் உண்டு; இது பிழையேயாயினுஞ் செய்யுள்யாத்தல் வருத்தமான செயலாதல்பற்றி அதனை ஆன் றோர் விலக்காதுகொள்வர். எனினுங், குற்றியலுகரத்தின்முன் வரும் உயிர் உடம்படுமெய் பெறுதல் இயற்கைக்கும் இலக் கணத்திற்கும் மாறாய் இன்னா ஓசைத்தாயிருத்தலின், தொல் காப்பியனார் காலத்திற்கு முன்னும் அவர்க்குப்பின் இடைச் சங்க கடைச்சங்கச் சான்றோர் செய்யுட்களினுங், கி-பி இரண் டாம்நூற்றாண்டில் இயற்றப்பட்ட 'சிலப்பதிகாரம்,' 'மணிமே கலை' என்பவற்றினுங்கூட அங்ஙனங் குற்றியலுகரத்தின்முன் வரும் உயிர் உடம்படுமெய் பெற்றுமுடிதலை யாண்டுங்கண்டி லேம். மற்று, மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவாசகத்திலோ, அடித்தடித் தக்காரம் என வரற்பாலது சீர் கெடாமைப்பொருட்டு "அடித்தடித்து வக்காரம்" (அற்புதப் பத்து, ௩) என ஓரிடத்தில் மட்டுங் குற்றியலுகரத்தின் முன் வந்த உயிர் உடம்படுமெய்பெற்று முடிந்தது. எனவே, பண்டை

இலக்கண ஆசிரியராகிய தொல்காப்பியனார் செய்த இலக்கணத்திற்கும், அவர்க்குப்பின் வந்த ஏனைச் சான்றோர் செய்த இலக்கியங்கட்கும்முரணாகப், பாக்களிற் சீர்தளைகெடாமைப்பொருட்டுச் சொற்களையுஞ் சொற்புணர்ச்சிகளையும் ஒரோவழிப் பிழைபட அமைத்தல், திருவாதவூரடிகள் இருந்த கி-பி மூன்றாம் நூற்றாண்டுமுதல் நிகழ்ந்ததாகல் வேண்டும். இவ்வாறு பண்டைச் சான்றோர் இலக்கண இலக்கியங்கட்கு முரணான பல மாறுதல்கள் கி-பி மூன்றாம் நூற்றாண்டுமுதல் இத் தென்றமிழ் நாட்டின்கண் நிகழலானமை வேறோராற்றானும் பெறுதும். என்னை? தொல்காப்பியத்துஞ், சங்க இலக்கியங்களினும் ஒரு சிறிதுங் காணப்படாத 'கட்டளைக் கலித்துறை,' 'விருத்தம்' என்னும் பாவகைகளும், புதிய புதிய வடசொற்களும் பாரத ராமாயண புராணகதைகளும், பல்சமயக் கோட்பாடுகளும், பிறவும் கி-பி மூன்றாம்நூற்றாண்டிலிருந்து இயற்றப்பட்ட தமிழ் நூல்களின் மட்டுமே காணக்கிடத்தலினென்பது. இங்ஙனமாக முன்னோர் நூல்களிற் காணப்படாதனவும், அவற்றோடு ஒரோவழி மாறுவனவுமாகிய பல நிகழ்ச்சிகளின் இடையே, 'குற்றியலுகரத்தின்முன் வரும் உயிர் உடம்படுமெய் பெறும்' புதுவழக்கும் ஒரோவொருகால் விரவலாயிற்று. ஆகவே, "உண்மைமாவீர்த்து விருள்கடிந்து" என சக-ஆஞ் செய்யுளினும், "ஐயுணர்வான் ஆய்ந்து வறஞ்சார்பா" என சச-ஆஞ் செய்யுளிலுங் குற்றியலுகரத்தின்முன் வந்த உயிர்க்கு உடம்படுமெய் புணர்த்து ஓதிய 'இன்னிலை' என்னும் நூலும் அதனாசிரியர் பொய்கையாருந், திருவாதவூரடிகள் இருந்த கி-பி மூன்றாம்நூற்றாண்டிற்குச் சிறிதுமுன்னே இருந்தமை தெற்றென விளங்காநிற்கும். 'களவழி' நூலில், முன்னோர் வழக்குக்கு முரணான இப்பெற்றியது எதுவுங் காணப்படாமையிற், களவழியும் அதனை யாக்கிய பொய்கையாருங் கடைச்சங்ககாலத்தில் அதாவது கி-பி இரண்டாம்நூற்றாண்டிற்கு முன்னே இருந்தமையுந் தானே பெறப்படாநிற்கும். இவ்வாற்றாற் 'களவழி' யியற்றிய பொய்கையார்

கி-பி இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னும், 'இன்னிலை' இயற்றிய பொய்கையார் கி-பி இரண்டாம் நூற்றாண்டின் ஈற்றிலும் இருந்தமை பெறப்படுதலின் அவ்விருவரும் வேறுவேறுவரென்பது கடைப்பிடிக்க. இன்னிலையியற்றிய பொய்கையார் முன்னோர் வழக்கொடு மாறுபட்டது இஃதொன்றின்மட்டுமே யல்லாமல், எனைப் பா அமைப்பு முதலியவற்றின் அல்லாமையின் இவரைக் கி-பி இரண்டாம் நூற்றாண்டின் ஈறு அல்லது மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்திற்குப்பின் கீழ்இறக்குதல் இயலாதென்பதூஉங் கருத்திற் பதிக்கற்பாற்று.

'இன்னிலை' இயற்றிய பொய்கையார் கி-பி இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவரல்ல ரென்பது மற்றுமோராற்றானும் பெறுதும். போர்க்களத்தில் வந்து நின்ற அருச்சுனனுக்கு, அவன் தேரிற் பாகனுய் அமர்ந்த கண்ணன் 'பகவற்கீதை நூல்' செவியறிவுறுத்தினனென்னும் மாபாரதக்கதையை 'இன்னிலை' யின் முதற்செய்யுள் குறிப்பிடுகின்றது. பாரதப்போரை மட்டுங் குறிப்பிட்ட பழந்தமிழ்ப்பாட்டுக் கி-மு மூவாயிர ஆண்டுகட்கு முன்னரே உளதேனும், மாபாரதக் கதைகளையாதல், கண்ணன் என்னும் பெயராற் கண்ணனது வணக்கத்தையாதல் குறிப்பிட்ட பழந்தமிழ்ப்பாட்டுக் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்தில் ஒன்றுமேயில்லை. மாபாரதக்கதை தமிழ்நாட்டார்க்குத் தெரியத்துவங்கியதும், அது தமிழின்கண் மொழிபெயர்க்கப்படலானதும், அதன்வழியே கண்ணனுந் திருமாலின்வடிவான ஒருதெய்வமாகவைத்து ஈண்டுள்ளாராற் பெரிது வணங்கப்படலானதும் எல்லாங் கி-பி முதல்நூற்றாண்டு முதல் நிகழலாயின வென்பதை முன்னரே (276-ஆம் பக்கத்தில்) விளக்கிப்போந்தாம். ஆகையாற், கண்ணன் அருச்சுனற்குக் கீதைநூல் அறிவுறுத்தியதாகக் கூறும் மாபாரதக் கதையைத் தமது 'இன்னிலை' முதற்செய்யுளில் எடுத்து மொழிந்த அதன் ஆசிரியர் பொய்கையார் கி-பி முதல் நூற்றாண்டிற்கும் பின்னிருந்தோரேயாதல் வேண்டும். 'பகவற்கீதை' என்னும் நூல் மாபார

தத்தில் எழுதி இடைநுழைக்கப்பட்டது கி-மு முதல்நூற்றூண்டிற்கு முற்சென்றதெனல் ஆகாமையானும்*, அது தானுந் தமிழ்நாட்டார்க்குத் தெரியலானது கி–பி முதல் நூற்றூண்டிற்கு முன்னென்றல் இயையாமையானும், அதனைக் குறிப்பிட்ட 'இன்னிலை' ஆசிரியர் பொய்கையார் கி–பி இரண்டாம் நூற்றூண்டின்கட்பட்டவ ரென்பதே தேற்றமாம் என்க.

இனி, 'முதற்றிருவந்தாதி' பாடிய பொய்கை யாழ்வார், 'இன்னிலை' பாடிய பொய்கையாரைப்போல், தமது கூ௫-ஆஞ் செய்யுளிற் குற்றியலுகரத்தின்முன் வந்த உயிர்க்கு உடம்படுமெய் புணர்த்தோதினு ரென்றதும் பிழைபாடாம். என்னை? "நமோநாரணு வென்ன" என வேறு திருத்தமான பாடமே வைணவப்புலவர்களால் ஒப்புக்கொண்டு பதிப்பிக்கப்பட்டிருத்தலின்†: "என்று" என்னும் பிழையான பாடத்திற்கு வேருக "என்ன" என்னுந் திருத்தமான பாடம் உளதாகலிற், பிழையான பாடம் இவ் வொன்றைக்கொண்டு பொய்கையாழ்வாரையும், 'இன்னிலை' பாடிய பொய்கையாரையும் ஒன்றுபடுத்த முனைந்த இன்னிலைப் பதிப்புரைகாரர் கருத்து நிரம்புமாறில்லையென விடுக்க. பிழையான பாடத்தையே உறுதியாக்கொண்டு, அவ்விருவரையும் ஒன்றுபடுத்தலாமெனினுங், குற்றியலுகரத்தின்முன் வந்த உயிர்க்கு உடம்படுமெய் புணர்த்து ஓதிய திருவாதவூரடிகளும் உளராகலின், இப் புதியபுணர்ப்புப் பொய்கையார்க்கும் பொய்கையாழ்வார்க்குமே உரித்தென்றலும் பொருந்தாதென ஓர்க.

இனி, 'இன்னிலை'யின் உஎ ஆஞ் செய்யுள் "மகவு" என முற்றியலுகர ஈற்றுன் முடிதல்போலப், பொய்கையாழ்வார் அருளிச்செய்த 'முதற்றிருவந்தாதி'யின் கஉ, ருக, சுஎ-ஆஞ் செய்

* See 'Gita and Gospel' by Dr. J. N. Farquhar. † 1908 இல் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் திரு உ. வே கோபாலாசாரியாராற் பதிப்பிக்கப்பட்ட 'நாலாயிரப்பிரபந்தப்' படியைப் பார்க்க.

51

யுட்களும் முற்றியலுகர ஈற்றான் முடிதலின், அவ் விரு நூல்க ளையும் ஆக்கிய பொய்கையார் ஒருவரேயாவரென இன்னிலைப் பதிப்புரைகாரர் கூறினர். இவர் கூறியபடியுளவா என்று 'முதற் றிருவந்தாதி'யை யாம் எடுத்து உற்றுநோக்க, அதன்கட் கஉ-ஆஞ் செய்யுளின் ஈற்றில் "இயல்பு" எனக் குற்றியலுகர ஈறு வந்திருக்கக்கண்டாமே யன்றி, அவர் கூறியபடி முற்றியலுகர ஈறு வரக்கண்டிலேம். உண்மை யிவ்வாறாக, அதனை அப்பதிப் புரைகாரர் புரட்டிக் கூறியது என்னையோ! ஆனல், ருங-ஆஞ் செய்யுள் "கரவு" எனவும், கஎ-ஆஞ் செய்யுள் "உணர்வு" எனவும் அவர் உரைத்தவாறே முற்றியலுகர ஈறுகளாலே தாம் முடிந் திருக்கின்றன. இங்ஙனம் வெண்பாயாப்புக்கள் முற்றியலுகர வீற்றான் முடிதல், 'இன்னிலை,' 'முதற்றிருவந்தாதி' என்னும் இவ் விரு நூல்களிலன்றி, வேறு வெண்பா நூல்களிற் காணப் படாதாயினன்றே, அவற்றின் ஆசிரியரை ஒருவராகக் கூறுதல் ஒருவாற்றாற் கூடினுங் கூடாநிற்கும்? மற்று, வெண்பாயாப்புக் கள் ஓரோவழி முற்றியலுகரஈற்றான் முடிதலும் உண்டென்பது,

"கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு" எனத் திருக்குறளி

லும் (ககள),

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடிற் பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு" என முத்தொள்ளாயிரத்தி

லும் அவ்வாறு முடிந்த செய்யுட்களால் நன்கறியக்கிடத்தலின், அதனை இன்னிலை, முதற்றிருவந்தாதி என்னும் இரண்டுக்குமே வரைசெய்தலும், அங்ஙனம் வரைசெய்த பிழைபாட்டால் வெவ் வேறு காலத்தினரான இன்னிலைப் பொய்கையாரையும் பொய் கை யாழ்வாரையும் ஒருவ ரென்றலும் போலி யாராய்ச்சியா மென மறுக்க.

இனி, அப்பதிப்புரைகாரர் 'இன்னிலைச்' செய்யுட்கள் சில வற்றிற்கும், 'முதற்றிருவந்தாதிச்' செய்யுட்கள் சிலவற்றிற்குங் காட்டிய பொருளொற்றுமையும் பொருந்தாதா யிருத்தலின், அப் பிழைபாட்டினையும் ஈண்டெடுத்துக் காட்டுதும், 'இன் னிலை'யின் நாற்பதாஞ் செய்யுளாகிய,

"முப்பாலை வீழ்வார் விலங்கார் செறம்பாலை
முப்பான் மயக்கேழ் பிறப்பாகி—எப்பாலும்
மெய்ப்பொருள் தேறார் வெளிமோரார் யாண்டைக்கும்
பொய்ப்பாலை யுய்வாயாப் போந்து" என்பது 'காமவெகுளி மயக்கங்கட்கு இடனாகியபொருள்களை விரும்புவோர்துன்புறுத் தும் பிறவியை ஒழியாராய், முக்குற்றங்களது மயக்கத்துக்கு ஏதுவாகிய எழுபிறப்புட்பட்டுப், பொய்ப்பகுதியாம் பொருள் களே தாம் எவ்விடத்தும் பிழைத்தற்கு வாயிலாகும் எனக் கருதி வந்து, எவ்விடத்தும் மெய்ப்பொருளைத் தெளியாராக லின் அவ்வியல்பினர் அருள்வெளியை உணரார்' எனப்பொருள் படுகின்றது. இனி அவர்காட்டிய முதற்றிருவந்தாதி எழாஞ் செய்யுளாகிய,

"திசையுந் திசையுறு தெய்வமுந் தெய்வத்
திசையுங் கருமங்க ளெல்லாம்—அசைவில்சீர்க்
கண்ணன் நெடுமால் கடல்கடைந்த காரோத
வண்ணன் படைத்த மயக்கு" என்பதோ "திசைகளும் திசைகளின் நிற்குந் தெய்வங்களும், அத்தெய்வங்களால் இசை விக்கப்படுஞ் செயல்களும் எல்லாம் மாயோன் தனது மாயை யின் வன்மையால் ஆக்கிய மயக்கப் பொருள்கள் ஆகும்' எனப் பொருள் தருகின்றது. முன்னையது, உலகத்துப் பொருள்க ளிற் பற்றுவைத்தவர்க்குப் பிறவியொழியாமையும் முதற்பொரு ளையுணர்வும் மெய்யுணர்வு வாயாமையும் அறிவுறுத்தாநிற்கப், பின்னையதோ காட்சிப்புலனாவன வெல்லாம் மாயோன் படைத்த மாயை என்று மட்டும் உணர்த்தாநிற்கின்றது. இருவேறு புலவ ராற் செய்யப்பட்டுப் பொருளொற்றுமை சிறிதுமில்லாத இவ்

விருவேறு செய்யுட்களின்றன்மை கல்வியறிவு சிறிதுடையார்க்கும் இனிது விளங்கிக் கிடப்பவும், இவ்விரண்டும் ஒருவராற் செய்யப்பட்டுப் பொருளொற்றுமை யுடையவாயின என்ற 'இன்னிலைப்' பதிப்புரைகாரரது உரை பெரியதொரு மயக்குரையேயாம்; 'மயக்கு' என்னுஞ்சொற் காணக்கிடக்குந் தமிழ்ச் செய்யுட்களை யெல்லாம் அவர் 'பொய்கையார் செய்யுட்கள்' எனக் கூறத் துணிவர்போலும்!

இனி, 'இன்னிலை'யின் பத்தாஞ் செய்யுளாகிய,

"இடிப்பதென் றெண்ணி இறைவனைக் காயார்
முடிப்பர் உயிரெனினும் முன்னர்—கடிப்பவே
கன்றமர்ந்து தீம்பால் கலுழுமே நீண்மோத்தை
ஒன்ற உணராதார் ஊங்கு" என்பது 'இடியிடித்து அச்சுறுத்துதல்பற்றித் தலைசிறந்த மழைமுகிலை எவரும் வெகுளார்; தீயோர் தமது உயிர்க்கு இறுதி பயப்பரெனினும் நல்லோர் அவர்க்குத் தீங்குசெய்ய நினையார், கன்று தனது முலையைக் கடித்தவிடத்தும் ஆ அதற்கு மனமுவந்து தித்திப்பான பாலைச் சுரக்கும், அதுபோலத் தமக்கு இன்னா செய்தார்க்குந் தாம் இனியவேசெய்தலைப் பொருந்த உணராதாரினும் ஆட்டுக்கிடாய்களே சிறந்தன' எனப் பொருள்படும். இதனோடு பொருள் ஒற்றுமையுடையதென அவர் காட்டிய முதற்றிருவந்தாதியின் முப்பதாஞ் செய்யுளாகிய,

"தெளிதாகஉள்ளத்தைச் செந்நிறீஇ ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழாயான் அடிக்கே
போய் நாடிக் கொள்ளும் புரிந்து" என்பதோ 'தெள்ளிதாகத் தமது மனத்தைச் செவ்விதின் நிறுத்தி, மெய்யுணர்வு கொண்டு முப்பொருளியல்பினை எளிதாக நன்குணரவல்லாரது நினைவு, தனது தாயை நாடிச்செல்லுங் கன்றைப்போல் எளிதாகத் திருமாலின் திருவடிகளை விரும்பிப்போய்த் தேடிக்கொள்ளும்' எனப் பொருள்தரும். இவ்விரண்டுள் முன்னையது 'தமக்

குத் தீதுசெய்வார்க்குந் தாம் தீது நினையாது நன்மையே செய்யும் நல்லாரது இயல்பினை' உணர்த்தாநிற்கப், பின்னையதோ 'மெய்யுணர்வு வாய்ந்தாரது நினைவு திருமாலின் திருவடிகளை எளிதிற் சென்று தலைக்கூடுமாற்றை' அறிவுறுத்துகின்றது. இவையிரண்டிற்கும் ஏதொரு பொருளொற்றுமையுங் காணப் படாதாகவும், அதனை யுளதுபோல் மயங்கியுரைத்த அப்பதிப் புரைகாரருரை கொள்ளற்பால தன்றென விடுக்க. கன்றும் ஆவும் அவ் விருசெய்யுட்களினும் உவமையாகக் கூறப்படுதலின், அவ்வுவமையையே அவற்றிற்கு ஓர் ஒற்றுமையாக்கொள்ளுதல் ஆகாதோவெனின்; அவ்வுவமை,

"பல்ஆவுள் உய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை" என **நாலடியாரி**னும் (க0க) போதரக் காண்டலின், அதனையும் பொய்கையாரே இயற்றினரென்று உரைத்தல் வேண்டும்; மற்று அவ்வாறுரைத்தல் பெரியதொரு தலைதடுமாற்றமாய் முடியுமாகலின், அங்ஙனங் கோடல் ஆகாதென மறுக்க.

மேலும், ஐம்புலன்களை அடக்கி உடற்குவருந் துன்பம் பொறுத்துத் தவம்புரிவார் வீட்டுலகத்திற் செல்வரென்பது அறிவுநூல்கள் எல்லாம் புகலும் ஒரு பொதுவுரையாகும். இப் பொதுவுரை 'இன்னிலை' சஉ-ஆஞ் செய்யுளிலும், 'முதற்திருவந்தாதி'யின் ருO-ஆஞ் செய்யுளிலுஞ் சிறிது ஒத்துக்காணப்படுதல் கொண்டு அவையிரண்டனையும் ஒருவரே யியற்றினரென்றல் பெரியதொரு மாறுகோள் உரையாம். இச் செய்யுட்களை நன்கு ஒப்பிட்டுக் காண்பார்க்கு, 'இன்னிலைச்' செய்யுட்கள் பொதுப்பட நிற்றலும், 'முதற்திருவந்தாதிச்' செய்யுட்கள் திருமால் மேலனவாய் நிற்றலும் எளிதுணரக்கிடக்குமாகலின், அந் நூல்களை யியற்றிய ஆசிரியர் இருவரும் வெவ்வேறு காலத்தவ ரென்பதே தேற்றமாம் என்க.

இனி, "ஒன்றுண்டே" என்னும் 'இன்னிலைச்' செய்யுள் 'உயிர்கள் உண்டு; அவை உடம்பைப் பற்றக்கோடாகக்

கொண்டு வினைகளைச்செய்யும்; மெய்யுணர்வு பிறந்தவழி இரு வினைகளை அறுத்து உடற்பற்றுவிட்டு வீடுபேறெய்தும்' எனக் கூறி முடிக்கின்றது. இச் செய்யுட்பொருளை 'இன்னிலைப்' பதிப்புரைகாரர் "விஷ்ணுமதசித்தாந்தம்" என்கின்றார். உலகத் தின்கண் உள்ள அறிவுடையா ரெல்லாருந் தொன்றுதொட்டுப் பொதுப்பட வழங்கிவராநின்ற இக் கோட்பாட்டை அப்பதிப் புரைகாரர் வைணவமதத்திற்கே உரித்தாக்கிய தென்னை? ஆயி ரத்து முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகிய **திருமந்திரம்** என்னுஞ் சைவசித்தாந்த நூல்,

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி" (கக௫) எனவும்,
"பசுப்பல கோடி பிரமன் முதலாப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு
பசுத்தன்மை நீக்கி அப்பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றிவிடாவே" (உ௪0௬) எனவும்

அக்கோட்பாட்டை நன்கெடுத்து மொழிதலின், அது பழைய தமிழர் கோட்பாடாகிய 'சைவசித்தாந்தமே' யாதல் பெறுதும். திருமந்திரத்தைப்போல், அத்துணைப் பழமையாகிய வைணவ சித்தாந்த நூல் ஏதேனும் உளதா? ஒன்றும் இல்லையே; அங்ஙன மிருக்க அக்கோட்பாடு வைணவமதத்திற்கே உரியதெனத் தமக் குத் தோன்றியவாறு பேசுதல் அப் பதிப்புரைகாரர்க்கு ஏதமா மென அறிக. இவ்வாற்றால் 'இன்னிலை' இயற்றிய பொய்கை யாரை வைணவரென்றலும் ஆகாதென உணர்ந்துகொள்க.

அற்றேல், 'இன்னிலை' பாடிய பொய்கையார் அதன் ஒன்று, மூன்று, இருபத்திரண்டாஞ் செய்யுட்களில் மாயோனை உயர்த் துச் சொல்லிய தென்னையெனின்; முதற்றிருவந்தாதி பாடிய பொய்கையாழ்வாரைப்போல், 'இன்னிலை' பாடிய பொய்கையா ருந் திருமால் திருவடிக்கண் மெய்யன்புடையவரேயாவர்; அது கொண்டு அவ் விருவரையும் ஒருவரெனக் கூறுதல் ஆகாது. அவ்விருவரும் வேறுவேறுவர் என்பதனை நாட்டுதற்குரிய சிறந்த

ஏதுக்கள் பலவும் மேலெடுத்துக்காட்டினமாதலால், அவர்தம் பெயரொற்றுமையும் அவர் தமக்குள்ள திருமால் திருவடிநேய மும் ஆகிய சில பொது ஏதுக்கள்கொண்டு அவ் விருவரையும் ஒருவராகத் துணிதல் பழுதுடைத்தாம். மேலும், 'இன்னிலைச்' செய்யுட்களிலுள்ள சொல்லமைப்புச் சொற்றொடரமைப்புகள் பொருட்டெளிவின்றிக்கருகலாய்நிற்றலும், 'முதற்றிருவந்தாதி' யின் அவ் வமைப்புகள் பொருட்டெளி வுடையவாய் விளங்கி நிற்றலும், அவ் விரண்டு நூல்களிலுமிருந்து மேலெடுத்துக்காட் டிய சிற்சில செய்யுட்களை ஒப்பிட்டுக் காண்பார்க்கும் நன்கு புலனுமாகலின், அங்ஙனந் தன்மையால் மாறுபட்ட அவ்விரு வேறுநூல்களையும் இயற்றினோர் இருவேறு பொய்கையாரேயாவ ரென்க. மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் முதலானபெயர்க ளைப்பூண்டோர் பற்பலர் இஞ்ஞான்றுங் காணப்படுதல்போலவே, ஒரேபெயர் பூண்டோர் பற்பலர் பற்பலகாலங்களில் முன்நாளி லும் இருந்தனரென்பதூஉம் பெரிதும் நினைவிற் பதிக்கற்பால தொன்றாம். நக்கீரர், கபிலர், ஔவையார் என்னும் பெயர்க ளைப் பூண்ட பற்பலர் பற்பல காலங்களில் இருந்தனர். இவ் வுண்மையை நினைந்துபாராமல் வரலாற்றுநூல்கள் எழுதுவோர் முன்னொடுபின் முரணுன பலசெய்திகளைத் தம்முடைய நூல்க ளுள் எழுதிச் சேர்த்தலால் அவர் விளைத்தனவும் விளைக்கின் றனவும் ஆகிய குழப்பங்கள் நிரம்பப் பல. இதுகாறும் விளக் கிய மூவேறு பொய்கையாரே யன்றி, **யாப்பருங்கலவிருத்தி** யுரையிலும் **பாட்டியன் மரபிலும்** எடுத்துக்காட்டப்படும் மற் றொரு பொய்கையாரும் உளர்; இங்ஙனமே, 'பேயார்,' 'பூதத் தார்' எனப் பெயர்பூண்ட முன்னோர் பிறருமுளரென்பது அவ் வுரையுட் பெறப்படுதல் காண்க.

இனி, "விருந்தேதானும்" என்னுந் தொல்காப்பியச் செய் யுளியற் சூத்திர உரையில் உரைகாரர் **பேராசிரியர்** "விருந்து தானும் புதிதாகத் தொகுக்கப்படுந் தொடர்நிலைமேற்று. அது 'முத்தொள்ளாயிர' மும் பொய்கையார் முதலாயினோர் செய்த

'அந்தாதிச்' செய்யுளும் என வுணர்க" என்றெழுதியதே கொண்டு, அவ்வுரைகாரர் பொய்கையாழ்வாரைக் கடைச்சங்க காலத்தவராகக் கொண்டனரென ஒருசாரார் கூறுநிற்பர். ஆசிரியர் தொல்காப்பியனார் தங்காலத்துவழங்காமற் பிற்காலத்திற் புதிது புகும் நூல்வகைகள் செய்யுள்வகைகள் உளவாயின் அவை தம்மையும் விலக்காது தழுவிக்கொள்க என்றற்கு இச்சூத்திரம் அருளிச்செய்தார்; ஒரு செய்யுளின் ஈறு அதனையடுத்த செய்யுட்கு முதலாக வரத் தொடுத்துப்பாடும் 'அந்தாதிச் செய்யுள்' தொல்காப்பியனார் காலந்தொட்டுக் கடைச்சங்கத் திறுதியாக வந்த சான்றோர் எவரானும் பாடப்படாமையின், அவ்வந்தாதிச் செய்யுள் கடைச்சங்க காலத்துக்குப்பின் வந்த சான்றோராற் புதிது செய்யப்பட்டனவாமென்பது புலப்பட உரைகாரர் பேராசிரியர் "புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்ற தென்னையெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த 'அந்தாதிச்' செய்யுளும்" என உரை கூறினர்; இவ் வுரைப்பொருளாற் 'பொய்கையாழ்வார் இயற்றிய முதற்றிருவந்தாதி' கடைச்சங்கத்தார் காலத்திற்குப் பின் புதிதாகச் செய்யப்பட்டதொன் றென்பதே வெள்ளிடைமலைபோல் விளங்கிக் கிடப்பவும், அவரது கருத்துக்கு முற்றும் மாறாகப், பொய்கையாழ்வாரை அவர் கடைச்சங்ககாலத்தவராகக் கொண்டாரெனத் தலைதடுமாறி யுரைத்தாருரை நகையாடி விடுக்கற்பாலதாமன்றி மற்றென்னை? பேராசிரியர்க்குப் பின் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட நச்சினார்க்கினியரும் "பின்னுள்ளார் பாட்டியன்மரபிற் கூறிய கலம்பகச்செய்யுள்"* எனவும், "இக் காலத்தார் கூறும் அந்தாதிச் சொற்றொடர்"† எனவும் விளங்கக் கூறுதலின், அவரும் பொய்கை யாழ்வார் பாடிய முதற்றிருவந்தாதியைப் பிற்காலத்ததெனவே கொண்டா

* தொல்காப்பியம், செய்யுளியல், உ௩௧, நச்சினார்க்கினியம்.

† தொல்காப்பியம், செய்யுளியல், உ௪0, நச்சினார்க்கினியம்.

ரென்பது புலனும். தொல்காப்பியத்திற்கு முதலில் உரைகண்டவரான இளம்பூரணர், பொய்கையார் திருவந்தாதியைப் பேராசிரியர் குறித்தாற்போற் றும் சிறிதுங் குறித்திலாமையின், அவர் பொய்கையாழ்வார்க்கு முற்பட்டவராவ ரென்பதூஉம் அறியற்பாற்று. பொய்கையாழ்வார் கடைச்சங்ககாலத்தவராயின், அச்சங்ககாலத்திற்குப் பின்னெழுந்த 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' என்பவற்றையும், அவற்றிற்கும் பிற்பட்ட 'புறப்பொருள் வெண்பாமாலை' யையுந் தம்முரையுள் எடுத்தாண்ட இளம்பூரணர் பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதியையும் எடுத்தாளாது இரார். ஆகவே, பொய்கையாழ்வாரது அந்தாதிச் செய்யுளை "விருந்தேதானும்" என்னுஞ் சூத்திரவுரையிற் குறிப்பிட்ட பேராசிரியர், அவர்க்குப்பின் கி-பி ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டில் இருந்தோராதலும், அதனை அச்சூத்திரவுரையிற் குறிப்பிடாத இளம்பூரணர் கி-பி ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டிலிருந்தோராதலும் ஈண்டேயறியற்பாலனவாம். அற்றாயின், யாப்பருங்கலக்காரிகை உரைப்பகுதிகள் சில, "அடிநிமிர்கிளவி ஈராறாகும்" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திர இளம்பூரணவுரை யெனப் பதிப்பிடப் பட்டதனுட் காணப்படுதல் என்னையெனின்; இளம்பூரணர் தொல்காப்பிய எழுத்துச் சொற்பொருள் என்னும் மூன்று ஒத்துக்களுக்குந் தாம் எழுதிய உரையுள் வேறு யாண்டுஞ் 'சூளாமணி,' 'சிந்தாமணிச்' செய்யுட்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுதலைக் காணேமாகலிற், செய்யுளியலில் இரண்டோரிடத்து மட்டும் அவர் அவற்றின் செய்யுட்களை எடுத்துக்காட்டினு ரென்றல் பெரிதும் ஐயுறற்பாலதொன்றாம். மேலுந், தொல்காப்பியனாராற் கூறப்படாமற், பின்வந்த 'யாப்பருங்கலக்காரிகை' காரரால் வகுத்துரைக்கப்பட்ட 'விருத்தப்பா' வகைகள் இவ்வுரையுள் ஆண்டிருந்தவாறே வருவித்து உரைக்கப்படுதலானும், இளம்பூரணருக்குப் பின்வந்த பேராசிரியர் அவ் விருத்தப்பாவகைகளைத் தமதுரையுள் அவ்வாறு வருவித்துரைப்பக் காணாமை

யானும், அவ் வுரைப்பகுதிகள் இளம்பூரணர் வரைந்தன ஆகா வெனவும், அவை யாப்பருங்கலக்காரிகை யுரையிலிருந்து பிற ரால் எடுத்துச் சேர்க்கப்பட்டனவா மெனவும், இவ்வேற்றுமை யுணராது அவற்றை இளம்பூரண ருரையெனப் பதிப்பித்திட் டது அதனைப் பதிப்பிட்டவரது தவறுமெனவும் பகுத்தறிந்து கொள்க. கொள்ளவே, தொல்காப்பிய முதலுரைகாரரான இளம் பூரணர் 'சூளாமணி,' 'சிந்தாமணி' நூல்களின் காலத்துக்குப் பிற்பட்டவரல்ல ரென்பதூஉம், அவர் அவற்றிற்கு முற்பட்ட கி-பி ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டில் இருந்தோராவரென் பதூஉங் கடைப்பிடித்துணரற்பாலவாம். எனவே, இளம்பூர ணர் காலத்தில் இல்லாததூஉம், பேராசிரியர் காலத்துள்ளதாய் அவராற் பிற்காலத்ததென்று கொள்ளப்பட்டதூஉமான பொய் கையாழ்வாரது முதற்றிருவந்தாதி கி-பி எட்டாம் நூற்றாண் டிற்குமுற்பட்டதாதல் செல்லாமையுந் தானேவிளங்கும்என்பது.

அற்றேற், 'கைலைபாதி காளத்திபாதி அந்தாதி' என்பதொரு நூல் நக்கீரனாரால் அருளிச்செய்யப்பட்டதென வழங்கக்காண்டு மாகலின், அந்தாதிச்செய்யுள் பிற்காலத்ததென்றல் யாங்ஙன மெனின்; 'நக்கீரனார்' என்னும் பெயர்கொண்ட புலவோர் பலர் பற்பலகாலத் திருந்தனரென முன்னரே கூறினமாகலிற், 'கைலை பாதி காளத்திபாதி அந்தாதி' பாடிய நக்கீரர் கடைச்சங்ககாலத் தவர் அல்லரென ஓர்க. பதினோராந்திருமுறை யில் 'திரு முருகாற்றுப்படை' நீங்கலாகக் 'கைலைபாதி காளத்திபாதி அந் தாதி'முதலிய நூல்களை இயற்றிய நக்கீரரும், அங்ஙனமே மூத்த நாயனார், கண்ணப்பதேவர், சிவபிரான் முதலாயினார்மேல் நூல்க ளியற்றிய கபிலர், பரணர், கல்லாடர், காரைக்காற் பேயம்மை யாருமெல்லாங் கி-பி நான்காம் நூற்றாண்டிற்கும் ஆறாம் நூற் றாண்டிற்கும் இடையிலிருந்தோ ராவர். "கொங்குதேர் வாழ்க் கை" என்னுஞ் செய்யுளுக்குக் குற்றங்கூறிய நக்கீரர், கடைச் சங்ககாலத்திற்குப் பின் கி-பி ஐந்தாம் நூற்றாண்டில் மதுரை யில் இருந்ததாகிய மற்றையொரு தமிழ்ச்சங்கத்திற் சபைப்புல

வர் பலரோடிருந்து தமிழாராய்ந்தவர் ஆவர். இவ் வரலாற்றினைப் பின்னே விளக்கிக்காட்டுதும். இவ்வாற்றால் அந்தாதிச் செய்யுள் கி-பி இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது அன்றென்பதூஉந் தெளியக்கிடந்தவாறுணர்க.

அற்றாயின், பொய்கையாழ்வார்க்கு முன்னிருந்த நக்கீரரது 'கைலைபாதி காளத்திபாதி யந்தாதி,' பேயம்மையாரது 'அற்புதத்திருவந்தாதி' முதலியவற்றை எடுத்துக்காட்டாது, அவர்க்கெல்லாம் பின்னர் இருந்த பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதியை மட்டும் பேராசிரியர் தமதுரையுள் எடுத்துக்காட்டியதென்னையெனின்; பேராசிரியர் வைணவமதம் பெரிதுங்கிளர்ச்சிபெற்றுநின்ற கி-பி ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டில் இருந்தவராகலின், அக் காலத்தில் எங்கும் மிக்கு வழங்கிய பொய்கை யாழ்வாரது முதற்றிருவந்தாதியைப் பிற்காலத்தவர் புதிது ஆக்கிய அந்தாதிச் செய்யுள் முதலியவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் குறித்திட்டாரென்க. என்றிதுகாறும் ஆராய்ந்து காட்டியதுகொண்டு, 'இன்னிலை' இயற்றிய பொய்கையார் கி-பி இரண்டாம் நூற்றாண்டிலும், 'முதற்றிருவந்தாதி'பாடிய பொய்கையாழ்வார் கி-பி எட்டாம் நூற்றாண்டிலும் இருந்தோராவரென்பது முடிக்கப்பட்டமை காண்க.

இனிக், 'களவழி' பாடிய பொய்கையாரோ, 'இன்னிலை' பாடிய பொய்கையார்க்கும் முன்னே கி-பி முதல் நூற்றாண்டிலிருந்தோராவர். அஃது யாங்ஙனமெனின், அதனையுஞ் சிறிது விளக்கிக் காட்டுதும். இப் பொய்கையார் 'சேரமான் கோக்கோதை மார்பன்' காலத்தவரென்பது, அவனை அவர் பாடிய "கோதைமார்பிற் கோதையானும்" என்னும் புறப்பாட்டால் (சஅ) நன்குவிளங்கும். பழையன் மாறன் என்போன் "மாடமலிமறுகிற்கூடல்" நகரிற் கிள்ளிவளவனைப் போரிற் றொலைத்தமை கண்டு, இக் கோக்கோதைமார்பன் பெரிதும் உவந்த வரலாற்றினை நக்கீரனார் அகநானூற்றில் (நசசு) எடுத்துப் பாடியிருக்கின்றனர். இன்னும், இவர் 'பாண்டியன் இலவந்திகைப்

பளளித்துஞ்சிய நன்மாறனை' "ஏற்றுவலன் உயரிய" என்னும் புறப்பாட்டில் (நூ) முன்னிலைப் படுத்துப் பாடியிருத்தல் கொண்டு அவ் வரசனும் இவரும் ஒரு காலத்தின ரென்பதுந் துணியப்படும். இவ்வரசனையே இடைக்காடனார் என்னும் நல்லிசைப்புலவரும் "ஆறுவீகை" என்னும் புறப்பாட்டில் (சஉ) முன்னிலைப்படுத்துப் பாடியிருத்தலால் அவரும் இப்பாண்டியன் காலத்தவரென்பது புலப்படும். இவ் விடைக்காடனாருங் கபிலருந் தோழர் என்பது "பின்னமில் கபிலன் தோழன் பெயரிடைக் காடனென்போன்" என்பதனால் (நம்பியார் திருவிளையாடல், உ0, க) அறியப்படும். இவ்வாற்றால் நக்கீரனாரும் இடைக்காடனாரும் ஒருகாலத்தவ ரென்பது பெறப்படுதலானும், 'அகநானூற்'றில் (எஅ) நக்கீரனார் 'கபிலரைப்' புகழ்ந்து பாடியிருத்தலோடு அதன் கசக-ஆஞ் செய்யுளிற் 'சோழன் கரிகாற் பெருவளத்தான்'றன் இளமைக் காலச்துச் செய்தியைக் கூறுதலானும் கபிலர், இடைக்காடனார், நக்கீரனார், 'களவழி' பாடிய பொய்கையார் என்னும் இந் நல்லிசைப் புலவர்களெல்லாருஞ் சிறிதேறக்குறைய ஒருகாலத்தினரென்பது பெறப்படும். அற்றாயினுங், கபிலர் 'சோழன்கரிகாற்பெருவளத்தான்' காலத்தில் இருந்திலரென்பதனை மேலே 327-ஆம் பக்கத்தில் விளக்கிக்காட்டினமாதலானும், நக்கீரனார் அச்சோழவேந்தனது இளமைக்காலத்தில் இருந்தமை புலனாதலானும் கபிலர் ஆண்டின் மிக முதியராயிருந்தபொழுது, நக்கீரனாரும் பொய்கையாரும் நடுத்தர ஆண்டினராயிருந்து, நக்கீரனார் சோழன் கரிகாற்பெருவளத்தான் காலம் வரையிலும், பொய்கையார் அவனுக்குப் பின்வந்த சோழன் செங்கணான் காலம் வரையிலும் இருந்தாராகற்பாலர். எனவே, 'களவழி' பாடிய பொய்கையார், கி-பி முதல்நூற்றாண்டின் முற்பாதியிலிருந்தவராக 328-ஆம் பக்கத்திற் காட்டப்பட்ட கபிலரது முதுமைக்காலந்தொட்டு, அவர்க்குப்பின் அந் நூற்றாண்டின் இறுதிவரையி லிருந்தமை கண்டுகொள்க.

இனி, ஆழ்வார்கள் எல்லாரும் தேவார திருவாசகங்களை நன்கு பயின்றவர்களென்பதற்குச் சான்றாக, அப்பர் ஞானசம்பந்தர் அருளிச்செய்த தேவாரப்பாக்களிலுள்ள "பொன்திகழ் மேனியன்," "புரிசடைப் புண்ணியன்" முதலான சில சொற்றொடர்களைப் பொய்கையாழ்வார் எடுத்தாண்டமையினையும், தொண்டரடிப்பொடி யாழ்வார் 'திருவாசகத்'தின்கண் உள்ள திருப்பள்ளியெழுச்சியையும், திருநாவுக்கரசு நாயனாரின் திருநேரிசையையும் பயின்று அவற்றோடொப்பப் பாடியவாற்றினையும், சூடிக்கொடுத்த நாச்சியார் திருவாசகத்தின் 'குயிர்பத்தைப்' பயின்று அதனோடொப்பத் தாம் ஒன்று பாடிய வகையினையும் முறையே 270-271, 291-292, 377-378-ஆம் பக்கங்களில் விளக்கிக்காட்டினாம். இன்னுந் திருஞானசம்பந்தப் பெருமானும் சுந்தரமூர்த்திநாயனாருந் தாம் அருளிச்செய்த திருப்பதிகங்களின் இறுதிச் செய்யுட்கடோறும் தம் பெயருந் தம் ஊர்ப் பெயருங் கூறித், தாம் சிவபிரான்மேற் பாடிய அப்பதிகங்களை அன்புடன் ஓதுவார் இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுச் சிவபிரான் திருவடியை அடைகுவர் எனப் பயன்உரைத்து வாழ்த்துமாறு போலவே, பெரியாழ்வாரும், அவர்தம் மகள் நாச்சியாரும், குலசேகரப் பெருமாளும், மதுரகவியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாருந் தாம்பாடிய பதிகங்களின் இறுதிப்பாட்டுக்கடோறுந் தம் பெயருந் தம் ஊர்ப்பெயர் முதலியனவும் உரைத்துத் தம்முடைய பதிகங்களைப் பயில்வாரும் அங்ஙனமே இம்மை மறுமைப் பயன்களை யெய்தித் திருமால் திருவடியைச் சேர்குவர் என வாழ்த்துதல் காண்க. அற்றன்று, இவ் வாழ்வார்கள் பாடிய அம் முறையைப் பார்த்தே சைவசமயாசிரியர் அங்ஙனம் வாழ்த்துரை கூறினர் என்னுமோவெனின்; என்னும், என்னை? ஆழ்வார்களுள் முதலாழ்வார் மூவரும் மாணிக்கவாசகர், அப்பர், திருஞானசம்பந்தர்க்குப் பின்னும், ஏனையாழ்வார்கள் சுந்தரர்க்குப் பின்னும் இருந்தோராதலை மேலே பலவாற்றானும் ஆராய்ந்து விளக்கி நிறுவினமாகலின்.

என்பது. இனிச், சைவசமயாசிரியரும் வைணவ ஆழ்வாரும் ஒருவர் மற்றொருவர் பாட்டுக்களைப் பாராமலே அங்ஙனம் பாடினாரெனல் ஆகாதோவெனின்; அதுவும் ஆகாது; ஒன்றற்கொன்று பெரிது விலகிக்கிடக்கும் நாடுகளில் ஒருவரையொருவர் அறியக்கூடாவாறு அவர் தனித்தனியே இருந்தனராயின், அவர் ஒருவரையொருவர் பின்பற்றாது பாடினாரெனலாம். வைணவ ஆழ்வார்கள் ஐரோப்பா தேயத்திலும் சைவஆசிரியர் தமிழ்நாட்டிலும் இருந்து ஒருவரையொருவர் அறியக்கூடாத நிலைமையினராய் வைகி அப்பதிகங்களை அருளிச்செய்தனரென்று கொள்வார் எவரும் இன்மையினானும், அவரெல்லாரும் ஒன்றற்கொன்று மிக அணித்தாயுள்ள இத் தென்றமிழ்நாட்டின் ஊர்களுள்ளேயே வைகியிருந்து இந்நாட்டவர்வழங்கிய செந்தமிழ்மொழியிலேயே தத்தம்பதிகங்களை அருளிச்செய்தாரென்பது எவரும் நன்குணர்ந்ததே யாகலானும், அவருட் பிற்காலத் திருந்தவர் முற்காலத்திருந்தார் செய்யுண்முறைகளைப் பாராமலும் பின்பற்றாமலும் பாடினாரெனல் உலகியலறிவுவாய்ப்பப்பெறாதார் கூறும் பொருத்தமில் உரையேயாம். மேலுஞ், சிவபிரான் வழிபாடும், திருமால்வழிபாடும் இத்தென்றமிழ்நாடெங்கும் பண்டுதொட்டு நடைபெற்றுத் தமிழ்மக்கட்குப் பொதுவாய்ப் பெரிது பரவியிருத்தலின், அவ்விருவகை வழிபாடுகளையும் வலியுறுத்தி அக்கடவுளர்மேற் பாடிய சான்றோர் பாட்டுகள் இந்நாடெங்குமுள்ளாரார்பாராட்டப்பட்டு எவர்க்குந்தெரிந்தனவாய்ப் பரவிவழங்குவனவே யல்லாமல், எவர்க்குந் தெரியாமல் அரிதுணர் மறைபொருளாய் ஒரு மூலையில் இருப்பன அல்ல. ஆகவே, சைவசமய ஆசிரியர்கள் காலத்தால் முற்பட்டவராகலின் அவர்கள் அருளிச்செய்த தேவார திருவாசகப் பாடல்கள் இத் தமிழ்நாடெங்கும் பரம்பி வழங்கினவாய் எவர்க்குந் தெரிந்தனவாயேயிருப்பவாகலான், பின்வந்தஆழ்வார்கள் அவற்றை நன்குபயின்று, அவற்றைப்போல் தாமுந் திருமால்மேற் பாடவிழைந்து அவ்வாறேசெய்தது இயற்கையேயாம். ஆதலால், அவ்விருபாலாரும்

ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே பாடினாரென்ற லும் ஒருசிறிதும் ஓவ்வாதென விடுக்க.

இனித், திருமங்கையாழ்வார் தேவார திருவாசகங்களை நன்கு பயின்றவரென்பதற்குச் சில குறிப்புகள் ஈண்டுக் காட்டு கின்றும். திருவாசகத்தில்,

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றான்"

(திருத்தோணோக்கம், ரு) எனவும், அப்பர்தேவாரத்தில் "இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எரியுங் காற்றுமாகி" (பொது) எனவும், வருமாறுபோற், சம்பந்தர் சுந்தரர் தேவாரங் களிலும் வரும் பாடல்கள் பலப்பல. இவற்றோடொப்பவே திருமங்கை யாழ்வார், "பாரும் நீரெரி காற்றினோ டாகாசமும் இவையாயினான்" (க, அ, எ) எனப் பாடினமைகாண்க.

திருவாசகத்தில்"ஒருநாமம் ஓர்உருவம்ஒன்றும் இலார்க்கு ஆயிரந், திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ" (திருத்தெள்ளேணம், க) எனவும், தேவாரத்திற் "பிறப்பில்பெரு மானை" (கோயில், உ) எனவும் அடுத்தடுத்துவருஞ் சொற்றொ டர்களைத் திருமங்கையாழ்வார் "பேரும் ஆயிரம் பேசநின்ற பிறப்பிலி" (க, அ, எ) எனத் தஞ்செய்யுளுள் எடுத்தாளுதல் காண்க. 'பிறப்பிலி' என்னும் பெயர் சிவபெருமான் ஒருவற்கே பொருந்துவதன்றிப், பத்துப் பிறவிகளுடையரென வைணவரே ஒப்புக்கொண்ட திருமாலுக்குப் பொருந்தாதாகவும், சைவ சமய ஆசிரியர் கூறுமாறுபோல் தாமுந் தங் கடவுளுக்குக்கூற விழைந்து திருமங்கையாழ்வார் 'பிறப்பிலி' எனும் அப் பெய ரைத் திருமாலுக்கும் ஏற்றிப் பாடினார். வைணவ ஆசிரியராகிய வில்லிபுத்தூராழ்வார் "பிறப்பிலி இறப்பிலி பிறங்க லரசன்றன் மகளார் நாதன்" (மாபாரதம்) என அச் சொற்றொடரைச் சிவ பெருமாற்கே உரித்தாக்கிக் கூறுதலும் உற்றுநோக்கற்பாற்று.

இன்னும், அப்பர் "திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்' (பொது) என்றருளிச்செய்தாற் போலவே, திருமங்கை

யார் "திருநாமம் எட்டெழுத்துஞ் சொல்லிநின்று" (க, அ, சு) என்று ஓதுதல்காண்க.

இனிச், சுந்தரமூர்த்திகள் "பொன்னார்மேனியனே" என்னும் பதிகத்தில்,

"எம்மான் எம்மனையென் றெனக்கெட்டனைச் சார்வாகார்
இம்பா யப்பிறவி பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே" என்

றருளிச்செய்த செய்யுளின் இசையையும் பொருளையுந் தழுவித் திருமங்கையார்,

"தாயே தந்தையென்றுந் தாரமேகிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன் உன்னைக்காண்பதோர் ஆசையினால்
வேயேய்பூம்பொழில்சூழ்விரையார்திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே" (க, கூ, க) எனப் பாடினமை காண்க.

இன்னுந் தேவார திருவாசகங்களுள் அடுத்தடுத்துக் காணப்படும் "பந்தணைவிரலி" (அப்பர், திருவாவடுதுறை, க0; ரு. திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, அ) என்னுஞ் சொற்றொடரைத் திருமங்கையார் "பந்தணை மெல்விரலாள் பாவைதன் காரணத்தால்" (உ, உ, ச) என எடுத்தாண்டமை காண்க.

இனி, அப்பர் "குரவைகோத்தவனும்" (பொது) என்றும், "குடமாடி" (திருக்கோடிகா) என்றுங் கண்ணனுக்கு வழங்கிய பெயர்களைத், திருமங்கையார் "குரவை முன்னே, கோத்தானைக் குடமாடு கூத்தன்றன்னை" (உ, ரு, ச) என்று தமது செய்யுளில் எடுத்தாண்டமை காண்க.

"நீளாஅடிமை உமக்கேயாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளாயிருக்கும் அடியார்தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே" என்

றருளியபடியே திருமங்கையாரும்,

"ஆசைவழுவா தேத்தும் எமக்கிங் கிழுக்காய்த் தடியோர்க்
தேசம்அறிய உமக்கேயாளாய்த் திரிகின்றோமுக்குக் [குத்
காசின்ஒளியில் திகழும்வண்ணங் காட்டீர் எம்பெருமான்
வாசிவல்லீர் இந்தளூரீர் வாழ்ந்து போம்மீரே" (௪, ௬, ௪)

என்று பாடியிருத்தல் கண்டுகொள்க.

இனி, "அளவறப்படுதற்கு அரியவன் இமையவர்க்கு, அடியவர்க்கு எளியான்" (திருச்சதகம், ௩௫) என்று திருவாசகத்தும், தேவாரத்தும் அடுத்தடுத்து வருதலைப்பார்த்துத், திருமங்கையாழ்வாரும், "வானவர் தமக்குச், சேயனாய், அடியேற்கணியனாய் வந்து" (௫, ௭, ௧) என்று ஓதுதல்காண்க.

இன்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனார்,

"அந்தணாளன்உன் அடைக்கலம்புகுத அவனைக்காப்பது காரணமாக, வந்தகாலன்றன் ஆருயிரதனை வவ்வினாய்க்குன்றன் வண்மைகண்டடியேன், எந்தைநீஎனை நமன்றமர்நலியின் இவன் மற்றென்னடியா னெனவிலக்குஞ், சிந்தையால்வந்துன் திருவடியடைந்தேன் செழும் பொழிற்றிருப் புன்கூருளானே" (திருப்புன்கூர்) என்றருளிச்செய்த செய்யுள் ஓசையினையுஞ் சொற்பொருள்களையுந் தழுவித் திருமங்கையாழ்வார்,

"நஞ்சு சேர்வதோர் வெஞ்சின அரவம் வெருவிவந்துநின் சரணெனச் சரணாய், நெஞ்சிற் கொண்டுநின் அஞ்சிறைப்பறவைக் கடைக்கலங்கொடுத் தருள்செய்த தறிந்து, வெஞ்சொலாளர்கள் நமன்றமர்கடியர் கொடியசெய்வன உளஅதற்கடியேன், அஞ்சி வந்துநின் அடியிணை அடைந்தேன் அணிபொழிற் றிரு அரங்கத்தம்மானே" (௫, ௮, ௪) எனப் பாடினமை காண்க.

இனித், திருநாவுக்கரசு நாயனார்,

"பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழவேண்டா
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாஉன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே"

(கோயில்) என்றருளிச்செய்த திருநேரிசைப் பதிகத்தின் இசையையுஞ் சொல்நடையையும் ஒப்பவே திருமங்கையாழ்வாரும்,

"கையிலங் காழிசங்கன் கருமுகில் திருநிறத்தன் [குன்
பொய்யிலன்மெய்யன் தன்தாள் அடைவரேல்அடிமையாக்
செய்யலர் கமலம்ஓங்கு செறிபொழில் தென்திருப்பேர்
பையரவணையான் நாமம் பரவிநான் உயர்ந்தவாறே" (௫, ௬, ௧) என்று பாடினமை ஓர்க.

இன்னும், "என் தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்" (திருவாசகம், திருக்கோத்தும்பி, ௮) என்று மாணிக்கவாசகர் அருளிச்செய்ததைப்பார்த்து, "எந்தாதை தாதையப்பால் எழுவர் பழவடிமை" (௭, ௨, ௬) என்றும், "எந்தையை எந்தை தந்தை தம்மானை" (௭, ௩, ௩) என்றும், திருவாசகத்தில் "எனக்கு எய்ப்பில் வைப்பே" (நீத்தல் விண்ணப்பம், ௩௬) எனப்போந்த சொற்றொடரை யெடுத்து "எனக்கு எய்ப்பினில் வைப்பினை" (௭, ௬0, ௪) என்றுந் திருமங்கையாழ்வார் பாடுதல் காண்க.

இனித் திருநாவுக்கரசு நாயனார் திருக்கழிப்பாலைப் பதிகத்தில்,

"வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே என்கின்றாளாற், சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு வெண்ணீற்றன் என்கின்றாளால், அனபவள மேகலையோடு அப்பாலைக் கப்பாலன் என்கின்றாளாற், கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள் கொல்லோ" என்றருளிச்செய்த செய்யுட்பொருளையும் இசையையும்பார்த்து, அவற்றோடொப்பவே திருமங்கையாழ்வார்,

"சிலையிலங்கு பொன்னாழி திண்படைதண்டு ஒண்சங்கம் என்கின்றாளால், மலையிலங்கு தோள்நான்கே மற்றவனுக்கு எற்றேகாண் என்கின்றாளால், முலையிலங்கு பூம்பயலை முன்போட அன்போடி யிருக்கின்றாளால், கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத் தம்மானைக் கண்டாள் கொல்லோ" என்று பாடியிருத்

தல் கண்டுகொள்க. இங்ஙனமே இவர் திருவாசகத்திற் போந்த 'கோத்தும்பி' முதலியவைகளைப் பார்த்தும், அப்பர் சுந்தரர் தேவாரப்பதிகங்களைப் பார்த்தும் பாடியவை இன்னும் பற்பல; அவையெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இஃது அளவின்றி விரியுமென அஞ்சி, அவைதம்மை இத்துணையின் நிறுத்துகின்றாம். இதுகாறும் எடுத்துக்காட்டிய இவையே மதச் செருக்கில்லாத மெய்யறிவினரைத் தெருட்டுதற்குப் போதியன வாதலால், இவை கொண்டு திருமங்கையாழ்வார், சைவசமயாசிரியர் நால்வர்க்கும் பின்னே இருந்தமை தெற்றெனத் துணிந்து கொள்ளப்படும். இங்ஙனஞ் சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் ஒரு நூற்றாண்டு பின்னேயிருந்த திருமங்கையாழ்வார், தமக்கு இரு நூற்றைம்பதாண்டு முற்பட்டிருந்த திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்டு அவரொடு வழக்கிட்டாரென வைணவர் கட்டி விட்ட கதைக்கு ஏதொரு சான்றும் எங்கும் இன்மையின், அக் கதை மதச்செருக்காற் றோன்றிய பெரும் புளுகுரையாமென்று தேர்ந்துகொள்க. தாம் வைணவசமயத்திற் குரியவராயிருந்தும் நடுவுநிலை பிறழமாட்டாமையிற் சீநிவாச ஐயங்கார் அவர்கள் தம் சமயத்தவர் கட்டிவிட்ட பெரும் பொய்க்கதைகளைக் கண்டு பெரிதும் அருவருப்புற்று "வைணவ ஆழ்வார்களைப்பற்றி உண்மையுள்ளதும் நம்பிக்கைக்கு இடமானதும் ஆன குறைந்தது ஒரு வரலாறுவது இருந்ததாயின், இத்தகைய கட்டுரை ஒன்று எழுதுதற்கு ஏதும் கட்டாயம் நேர்ந்திராது." என்று* தாம் ஒரு நூல் எழுதவேண்டிற்றனமைக்கு ஏதுக்கூறினார். பின்னும் அவர் "எமது கருத்திற்குப்பட்ட மட்டிற் பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட உண்மைவரலாறுகளிற் சிலபல ஒப்பிட்டுக் காணின் மிகவும் நம்பத்தக்கனவா யிருக்கின்றன; ஏனெனிற், சைவர்கள் தம்முடைய நாயன்மார் இருந்த காலங்களைப் பொய்

* "No necessity for an essay of this kind should have occurred, had there been at least one reliable and faithful biography of the Vaishnava saints" p. 296, 'Tamil Studies.'

யாக நீட்டிச் சொல்லவில்லை" என்று* கூறியதூஉங் கருத்திற் பதிக்கற்பாற்று. மேலும், மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தைப் பயின்றே சூடிக்கொடுத்த நாச்சியார் தம்முடைய பதிகங்களைப் பாடினாரெனவும் இவர் உண்மையை நடுநிலை திறம்பாமல் எடுத்துக்கூறினார்†. இங்ஙனமாகத் தேவார திருவாசகங்களை நன்கு பயின்றே ஆழ்வார்களெல்லாரும் நாலாயிரப்பிரபந்தப்பதிகங்களைப் பாடினரென்னும்முடிபு இதுகாறும் யாம் விரித்து விளக்கிய ஆராய்ச்சியால் நன்கு விளங்குவதோடு, வைணவரில் நன்கு கற்று நடுநிலை வழுவாது நிற்பார்க்கும் உடன்பாடா யிருத்தலின், இவ் வுண்மைக்கு முற்றும் மாறாகத் 'திருவாதவூரடிகள் ஆழ்வார்கள் பாடிய நாலாயிரப்பிரபந்தத்தைப் பார்த்தே திருவாசகம் பாடினார்' எனத் 'தமிழ்வரலாறுடையார்' உரைத்தது பெரும்புரட்டுப் பொய்யுரையாமென உணர்ந்துகொள்க. மேலும், வைணவப்புலவர்கள் கட்டிவைத்திருக்குங் கதைகள் பெரும்புளுகு மலிந்தனவா யிருத்தலின், அவற்றிற்குத் தக்க அகச்சான்று புறச்சான்றுகள் காணப்படினன்றி அவற்றைப் பற்றுக்கோடாகக்கொண்டு உண்மை ஆராயப்புகுதல் அவ்வுண்மைக்குமாறான பொய்ப்பொருளில் வழுக்கி விடும் என்பதும் இஞ்ஞான்றை வைணவப்பெரியார்க்கே உடன்பாடா யிருப்பவும், அஃதுணராது அப்பொய்க்கதைகளை உண்மையாக நம்பி அவர்தம் வரலாறு சொல்லப்புகுந்த 'தமிழ்வரலாறுடையார்' அவ்வாற்றால் வழுக்கி வீழ்ந்து புரைப்பட்டது பெரிதும் இரங்கற்பாலதொன்றாமென விடுக்க.

இனி, மாணிக்கவாசகர் காலத்தை ஆராய்ந்தாருள் ஒரு சாரார், அடிகள் தாம் அருளிய **திருச்சிற்றம்பலக்கோவையார்** இருபதாஞ்செய்யுளில் "உயர்மதிற்கூடலின் ஆய்ந்த ஒண்

---

* "In our opinion some of the historical accounts given in the Periya-purana are comparatively more trustworthy, as the Saivas do not assign fabulous ages to their Nayanars" p. 298, Tamil Studies, by Mr. M. Srinivasa Aiyangar, M. A.

† Ibid, p. 324.

டீங் தமிழின்துறை" என்று தமிழாராய்ந்த மதுரைச் சங்கத்தைக் குறிப்பிட்டிருத்தலின், அவர் அம்மதுரைத் தமிழ்ச்சங்கம் இருந்த கி-பி எட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னே இருந்தோராவரென உரைத்தார். இஞ்ஞான்று செய்யப்படுங் கல்வெட்டு ஆராய்ச்சியானும் நூலாராய்ச்சியானும் கி-பி ஆறாம் நூற்றாண்டிலும் ஏழாம் நூற்றாண்டின் இடையிலும் இருந்தவராக ஐயுறவுக்கு இடனின்றித் துணியப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்தமூர்த்திகளும் தாம் அருளிச்செய்த திருப்பதிகங்களில்,

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்" (திருப்புத்தூர், ௩) எனவும்,

"புகலி ஞானசம்பந்தன் உரைசெய், சங்கமலி செந்தமிழ்கள்" (திருத்தேவூர்),

"அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினானும்" (பொது) எனவும் மதுரைத் தமிழ்ச்சங்கந் தமக்கு முன்னிருந்ததனைத் தெளிவுறக் குறிப்பிட்டிருத்தல் கொண்டு, அது கி-பி ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னரே யிருந்தமை தெளியப்படுதலின், அஃது எட்டாம் நூற்றாண்டில் இருந்ததென உரைத்தாருரை பெரியதொரு தலைதடுமாற்ற வுரையாம். ஆகவே, அப்பிழைபாட்டுரை கொண்டு மாணிக்கவாசகர் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்தா ரென்றதூஉம் பெரிதும் பிழைபடுவதாமென மறக்க.

இனிச், 'சேரன் செங்குட்டுவன்' என்னுந் தமிழ்நூலை ஆக்கியோரும், 'தென்னிந்திய சைனமத ஆராய்ச்சிகள்'* என்னும் ஆங்கில நூலை ஆக்கியோரும் மதுரைத் தமிழ்ச்சங்கம் கி-பி ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகாது எனக் கூறினராகலின், அச் சங்கத்தைக் குறிப்பிட்ட மாணிக்கவாசகர் கி-பி மூன்றாம் நூற்றாண்டில் இருந்தாரெனல் பொருந்தாதாம் பிறவெனின்; அவ்விருவர்தங் கூற்றுக்களும் உண்மைக்கு மாறாதலை விளக்கிக்

* Studies In South Indian Jainism.

காட்டும் முகத்தால், அடிகள் குறிப்பிட்ட மதுரைத் தமிழ்ச் சங்கம் கி-பி மூன்றும் நூற்றுண்டிற்கு முற்பட்டிருந்தமை தெளிவுறுத்துதும். கி-பி ௪௭0-ஆம் ஆண்டில் **வஜ்ரநந்தி** என்பவரால் ஒரு தமிழ்ச்சங்கந் தென்மதுரையில் நிலைபெறுத்தப் பட்டதெனத் 'திகம்பரதரிசனம்' என்னுஞ் சமண்நூல் கூறும் வரலாற்றினை அவ்விருவருந் தாம் இயற்றிய நூல்களில் எடுத்துக்காட்டி அதனை உண்மையெனத் தழுவியிருக்கின்றனர்*. அங்ஙனம் ஒரு தமிழ்ச்சங்கம் நிலைபெறுத்தவேண்டிற்றுனது என்னையென நுனித்து ஆராயின், அதற்கு முன்னிருந்த கடைச் சங்கம் அழிந்துபட்டுத் தமிழாராய்ச்சியுந் தமிழ்வளர்ச்சியும் நிலைகுலைந்து போனமையினுலேயா மென்பது புலப்படும். அற்றேல், முன்னிருந்த கடைச்சங்கம் அவ்வாறழிந்துபடவுந் தமிழ் நிலை தடுமாறவும் நேர்ந்த இடுக்கண்கள் யாவையோவெனிற் கூறுதும். கண்ணகி கொழுநன் கோவலனை, அஞ்ஞான்று மதுரையில் அரசுபுரிந்த 'ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்' என்னும் மன்னன் ஆராயாது கொலைசெய்வித்துத் தான் செய்த அப்பிழையினைக் கண்ணகி எடுத்துக்காட்டிய வழிப் பெரிதும் எங்கி அரியணையில் இருந்தபடியே உயிர்துறந்தான்; அதுகண்டு அவன்றன் மனைவியும் உயிர்துறந்தாள். கண்ணகியோ தன் கணவனையிழந்த துயரமும் அரசன் தன் கணவனை நடுவின்றிக் கொன்றதனுல் உண்டாய பெருஞ் சினமும் பொருளாய்த் தன் கொங்கைகளுள் ஒன்றைத் திருகி மதுரைமேல் எறிய, அந்நகரந் தீப்பற்றிக்கொண்டது. நகரத்தில் உள்ளார் பலமுகமாய் உயிர்பிழைத்தோடினர். அப்போது ஆங்கிருந்த கடைச்சங்கப் புலவர்களும் அங்ஙனமே அந் நகரத்தைவிட்டுப் பலவாருய்ப் பிரிந்துபோயினர். அச்சங்கப்புலவருள் ஒருவரான **மதுரைக் கூலவாணிகன் சாத்தனுரும்** அங்கிருக்கமாட்டாமல், அப்போது மலைநாட்டை அரசுபுரிந்த **சேரன்செங்குட்டு**

* 'சேரன் செங்குட்டுவன்,' பக்கம் 170.
* Studies In South Indian Jainism, p. 52.

வனை யடைந்து, துறவுபூண்ட நல்லிசைப்புலவரும் செங்குட்டுவன் தம்பியுமாய இளங்கோவடிகளோடு அளவளாவியிருந்தனர். பாண்டிநாடோ அரசனை யிழந்தமையினாலும், தன் தலைநகர் தீப்பற்றி எரியுண்டமையினாலும் "மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி வெப்புநோயுங் குருவுந் தொடரப்"* பெரிதுவருந்திற்று. கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் பின்னர் அரசுக்கு வந்தான்; வந்தும் அரசியல் ஒழுங்கு பெறவில்லை. இதற்கு முன்னெல்லாம் பேராற்றலுடையராய் விளங்கிய பாண்டிய அரசரது வலிமையும் இப்போது மங்குவதாயிற்று. கவலையாற் பெரிது நைந்து வெற்றிவேற் செழியனும் இறந்துபட, அவற்குப்பின் 'உக்கிரப் பெருவழுதி' என்பான் அரசுக்கு வந்தான். பாண்டிய அரசில் நேர்ந்த இக்குழப்பங்களை யெல்லாம் நேரே கண்டவரான சாத்தனாரும் இளங்கோவடிகளும் சிலப்பதிகார மணிமேகலைகளில் அவற்றை நன்கெடுத்துக்கூறுதல்காண்க.

இவ் 'உக்கிரப்பெருவழுதி'யுங், 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி'யும் வெவ்வேறு பாண்டிமன்னராவரென்பது பகுத்துணர்ந்துகொள்ளல் வேண்டும். உக்கிரப்பெருவழுதி 'மணிமேகலை' ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனார்க்குப் பின்னே கி-பி மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்தோனாவன். கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியோ திருக்குறள் அரங்கேறிய காலத்திற் கூலவாணிகன் சாத்தனாரோடு அதனை ஒருங்கிருந்து கேட்டு அதற்குச் சிறப்புப்பாயிரமுஞ் சொன்னோன் ஆவன். திருக்குறள் அரங்கேறிய ஞான்று கபிலர், இடைக்காடனார் முதலான நல்லிசைப்புலவர் ஆண்டில் மிக முதியராயும், பரணர், கூலவாணிகன் சாத்தனார் முதலான நல்லிசைப் புலவர் ஆண்டில் மிக இளைஞராயும் இருந்தாரெனல் ஆராய்ச்சியாற் புலனாதலின், திருக்குறள் அரங்கேறியகாலம் கி-பி முதல் நூற்றாண்டின் பிற்பாதியிலிருத்தல் வேண்டுமென உணர்ந்துகொள்க; ஆகவே, கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெரு

* சிலப்பதிகாரம், உரைபெறுகட்டுரை.

வழுதி கி-பி முதல் நூற்றாண்டிலிருந்தோனாவ னென்பதூஉங் கருத்திற் பதிக்கற்பாற்று. கி-பி மூன்றாம் நூற்றாண்டிலிருந்த உக்கிரப்பெருவழுதி பாண்டிய அரசு நிலைகுலைந்த காலத்தில் இருந்தவனாதலின், அவன் வலிமையிற் சிறந்த 'வேங்கைமார்பன்' என்னுங் குறுநிலமன்னனை வென்று அவனது கானப்பேரெயிலைக் கைக்கொண்டா னென்பது சிறிதும் பொருந்தாது. அதுவேயு மன்றிக், கி-பி முதல் நூற்றாண்டின் இறுதிவரையிலிருந்தவராகப் புலப்படும் ஔவையாராற் பாடப்பட்டோன் 'கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதியே'யாகல் வேண்டுமெல்லாமற், கி-பி மூன்றாம் நூற்றாண்டிலிருந்த உக்கிரப்பெருவழுதியாகாமையும் உணரற்பாற்று. இவ்வாற்றாற் கி-பி முதல் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்து, சேரன் செங்குட்டுவனது காலமாகிய கி-பி இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதிவரையிலிருந்த பரணருங் கூலவாணிகன் சாத்தனாரும் நீண்டகாலம் அதாவது தொண்ணூறு அல்லது நூறாண்டுக்குமேல் உயிர் வாழ்ந்தாராதல்வேண்டும்; இது முன்னும் 326-ஆம் பக்கத்தில் விளக்கிக்காட்டினாம். அது நிற்க. காலத்தால் வேறுபட்ட இவ்விருவேறு உக்கிரப் பெருவழுதிகளையும் ஒருவரேயென இஞ்ஞான்றைப் புலவர்கள் மயங்கிக்கொண்டமையால் நேர்ந்த குழப்பங்களும் பிழைபாடுகளும் பல. அதுகிடக்க.

இனிக், கி-பி மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்த உக்கிரப்பெருவழுதி தனக்குமுன் நிலைகுலைந்த தமிழ்ச்சங்கத்தை மீண்டும் ஒருங்குகூட்டி நிலைபெறுத்த முயன்றிருக்கலாம்; ஆனால், அம்முயற்சி கைகூடிற்றில்லையாதல் வேண்டும். கோவலனைக் கொல்வித்த காலந்தொட்டுப் பாண்டியரது அரசிற் பல குழப்பங்களும் இடர்ப்பாடுகளும் அடுத்தடுத்துநேர்ந்தன. தமிழ் நாட்டுக்குப் புறம்பே வடக்கிருந்த **வடுகக்கருநாடர்** பாண்டி நாட்டைக் கைப்பற்றுதற்கு இதற்குமுன் முயன்றம் அஞ்ஞான்றெல்லாம் பாண்டிவேந்தர் மிகவும் வலியராயிருந்தமையின் அஃதவர்க்குக் கைகூடிற்றில்லை. ஆனாற் கி-பி மூன்றாம்

நூற்றாண்டு துவங்கிப் பாண்டியரது ஆற்றல் குறைந்தமையிற், சோழமன்னரது துணைபெற்று வடுகக்கருநாடர் பாண்டிய அரசர்மேற் படையெடுத்து வந்த வரலாறுகளை மேலே 99-ஆம் பக்கம் முதல் 108-ஆம் பக்கம்வரையில் வைத்து நன்கு விளக்கிக் காட்டி யிருக்கின்றேம். உக்கிரப் பெருவழுதிக்குப்பின் அரசுக்குவந்த வரகுணபாண்டியன் சிவபிரான் திருவடிக்கண் மெய்யன்புடையவனே யன்றிப், பேராண்மையில் மிக்கோன் அல்லன்; அதனால் அவன் தன்மேற் படையெடுத்துவந்த சோழனை இறைவனருளால்துரத்தினமையும், அங்ஙனமே அவ்வரகுணன் மகன் அரசுக்குவந்த ஞான்றும் வடுகக்கருநாடர் அவன்மேற் படையெடுத்துவர அவனும்போர்த்திறம் இல்லானாகலின் இறைவனருளால் அவர் தம்மைத் துரத்தினமையும், அவனுக்குப்பின் அரசுக்குவந்த வரகுணன் பேரன் காலத்தில் மீண்டும் அவ்வடுகக்கருநாடர் படையெடுத்துவந்து அவனைக் கொன்று பாண்டிய அரசைக் கைப்பற்றிக்கொண்டமையும் ஆங்கே விளக்கிப் போந்தாம். அவைகொண்டு கி-பி மூன்றாம் நூற்றாண்டுமுதல் அதன் முடிவு வரையில் அரசுபுரிந்த பாண்டி மன்னர்களின் அரசு செவ்வனே நடைபெறாமையினாலும், அயன் மன்னராற் கலக்குறுத்தப் பட்டமையினாலும் அந் நூற்றாண்டி லிருந்த பாண்டிமன்னர், தமக்குமுன்னே கி-பி இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் நிலைகுலைந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தை மீண்டுங் கூட்டி நிலைநிறுத்தமாட்டா ராயினர். மற்றுக் கி-பி மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிற் பாண்டிநாட்டிற் புகுந்து, பாண்டியனரசை வெளவிய வடுகக்கருநாடரோ தமிழ் மொழிக்கு உரியரல்லராகலின், அவரும் நிலைகுலைந்த தமிழ்ச்சங்கத்தைப் பெயர்த்தும் உருப்படுத்திவைத்தாரல்லர்; மேலும், அக்கருநட அரசர் சமண்மதத்தினராகலிற் பாண்டிநாட்டிலிருந்த சிவபிரான் திருக்கோயில்களில் வழிபாடு நடக்கவொட்டாமல் அவற்றை அடைப்பித்துவிட்டன ரெனக் **கல்லாட நூல்** கூறுவதூஉம் நினைவிற் பதிக்கற்பாற்று. இக்கருநடரது ஆட்சிக்காலந்தொட்

டுத்தான் சமண்மதந் தமிழ்நாட்டில் மிக்குப் பரவலாயிற்று. திருஞானசம்பந்தர் காலத்தில், அதாவது கி-பி ஏழாம்நூற்றாண்டின் முற்பாதியில் இருந்த கூன்பாண்டியன் முதலிற் சமண்மதத்தினனாயிருந்து பின்னர்த் திருஞானசம்பந்தப் பெருமானாற் சைவ சமயத்திற்குத் திருப்பப்பட்ட வரலாற்றினை உற்றுநோக்குவார்க்குக் கி-பி நான்காம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து ஏழாம் நூற்றாண்டின் நடுவரையிற் சமண்மதம் பாண்டிநாட்டில் மிக்குப் பரவியிருந்தமை புலனாம். இவ்வாறு வடுகக் கருநாடராகிய களப்பிரரால் பாண்டியரரசு சிலகாலங் கவர்ந்துகொள்ளப்பட்டமை வேள்விக்குடிப் பட்டயத்தாலும் புலனாதலிற், 'கல்லாடம்,' 'பெரியபுராணம்,' 'நம்பியார் திருவிளையாடல்' என்னும் பழைய தமிழ்நூல்கள் மூன்றானும் நுவலப்பட்ட இக் கருநடரது பாண்டிநாட்டு ஆட்சி சிறிதும் ஐயுறற்பாலதன்றென்க.

இனி, இக்கருநடரது ஆட்சி மதுரையில் நிலைபெற்றகாலம் கி-பி நான்காம் நூற்றாண்டுமுதல் ஐந்தாம் நூற்றாண்டின் ஈறு வரையிலாதல் வேண்டும். ஏனெனின், வேள்விக்குடிப் பட்டயத்திற்சொல்லப்பட்ட 'கடுங்கோன்' என்பவனைத் தலைக்கொண்டு தொடங்கிய புதுப்பாண்டிய மரபு ஆறாம்நூற்றாண்டின் நடுவிலிருந்து மதுரையில் அரசாளலான செய்தி அப்பட்டயத்தால் அறியக்கிடத்தலானும், அப் பாண்டிமரபு தொடங்குதற்குமுன் மதுரையை வௌவிய கருநடரது ஆட்சி கால்வழிபற்று மாய்ந்துபோக அப்போது பாண்டிய அரசர் மரபில் எவரும் இன்மையின் மூர்த்திநாயனார் என்பவர் மதுரைமாநகர்க்கு அரசராக அந்நகரினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி கல்லாடம் ருஎ-ஆஞ் செய்யுளில் நுவலப்படுதலானும், அம் மூர்த்திநாயனாரது அரசு கடுங்கோனுக்குமுன் ஆறாம் நூற்றாண்டின் முற்பாதியில் நடைபெற்றதாதல் வேண்டுமாதலானும் என்பது. மேலும், 'வஜ்ரநந்தி' என்னுஞ் சமண்முனிவர் கி-பி சஎ0-ஆம் ஆண்டில் மதுரையின் கண்ணே ஒரு தமிழ்ச்சங்கம் நிலைபெறுவித்தாரென்னும் வரலாற்றின் உண்மையை நோக்குங்கால், சமண்மதத்தவ

ளுகிய கருநட அரசனது ஆட்சி மதுரையில் அப்பொழுது நிலைபெற்றிருந்தமையும் சமண்மதத்தினர் கூட்டம் அங்கு மிக்கிருந்தமையும் நன்குபுலனும். தம்மதத்தினர் தொகைப்பெருக்கமும், தமது முயற்சி பயன்படுதற்குத் தம் அரசனது உதவியும் இருந்தாலன்றிச், சைவர்கள் மிகுந்துள்ள அந்நகரில் ஒரு சமண்முனிவர் அங்ஙனம் ஒரு தமிழ்க்கழகம் நிலைநிறுத்தல் இயலாதாகலின், அவ் வைந்தாம் நூற்றாண்டின் பிற்பாதி முடிய மதுரையிற் கருநட அரசரது ஆட்சியிருந்தமைதேற்றமாம். அற்றாயினுங், கி-பி நான்காம் நூற்றாண்டின் றொடக்கத்திலேயே கருநட அரசரது ஆட்சி மதுரையில் நிலைபெற் றிருப்பவும், அப்போதே அத்தகையதொரு தமிழ்ச்சங்கம் அங்கு ஏற்படுத்தப்படாமல், ஏறக்குறைய அவரது ஆட்சியின் முடிவுக்காலமாகிய ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அஃது ஏற்படுத்தப்பட்டவாறென்னையெனின்; மதக்கோட்பாட்டிற் சமணராயும் பேசும் மொழியில் வடுகராயும்உள்ள இவ்வேற்றுநாட்டரசர், சைவசமயத்தவராய்ப் பண்டுதொட்டுச் செந்தமிழ்வழங்குவார் நிறைந்த பாண்டிநாட்டுட் புகுந்து அங்கு வழிவழி ஆண்ட பாண்டியராசை வெளவித் தமதரசை நிலைபெறுத்தல் வேண்டினராயின், தம் அரசர்பால் நேயம் நிரம்பவைத்த தமிழ்க்குடிகட்கும் அப்புதிய கருநட அரசர்க்கும் எத்துணைப் போராட்டம் எவ்வளவு காலம் நிகழ்ந்திருத்தல்வேண்டும்! இப்போராட்டங்களெல்லாந் தணிந்து அப் புதியஅரசரும், இப் பழைய தமிழ்க்குடிகளும் ஒருமைப்படுதற்கும், அவருடன் போந்து குடியேறிய சமண்மதத்தவரும் இங்கிருந்த சைவரும் ஒருங்குகூடித் தமக்குள்ள வேறுபாடுகளை நிரவிக் கொள்ளுதற்கும் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகள் சென்றிருக்கவேண்டுமாகலின், வஜ்ரநந்தி என்பார் வகுத்த தமிழ்ச்சங்கம் அவ்வாறு அக்கருநட அரசரது ஆட்சிக்கால முடிவைநோக்கி எழுவதாயிற்றென்க. மேலும், அவ்வரசர் தமிழுக்குந் தமிழ்க்கொள்கைக்கும் புறம்பானவராகலின், அவர் பாண்டிநாட்டைக் கைக்கொண்டகாலத்திற் கடைச்

சங்கம் மதுரையி லிருந்தாலும், அவர் அதனைப் பாதுகாத்திரார். அன்றி அதனைப் பாதுகாத்திருந்தனராயின், வஜ்ரநந்தி என்னுஞ் சமண்முனிவராற் புதியதொரு தமிழ்க்கழகம் நிலை நாட்ட வேண்டுவதும் இன்றாம். அதுவேயும் அன்றி, இங்குள்ள பழந்தமிழ்ப் புலவரைக்கொண்டு ஒரு தமிழ்க்கழகம் புதுக்காமல், தம் மதத்தவராகிய வஜ்ரநந்தியைக்கொண்டு அங்ஙனம் அதனை நிறுவினமையாலும், அவ்வரசர் இங்கிருந்த தமிழ்ப் புலவர்பால் அன்புடையரல்ல ரென்பது பெற்றாம். பெறவே, கருநட அரசரது ஆட்சி மதுரையிற் றுவங்கிய கி-பி நான்காம் நூற்றாண்டிலும், அதற்குப் பின்னுங் கடைச்சங்கம் அங்கிருந்திலை யென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குதல் காண்க. அங்ஙனமே அவர் வருதற்குமுன் கி-பி மூன்றாம் நூற்றாண்டில் நடைபெற்ற பாண்டிய அரசு மகவின்மையானும் நோயானும் அரசியற் குழப்பங்களானும் பெரிதும் வலி குன்றி வருந்தினமையின், இரண்டாம் நூற்றாண்டில் மதுரை எரியுண்டமையாற் கலைந்த கடைச்சங்கப் புலவரை அது மீண்டும் ஒருங்குகூட்டி அதனை நடைபெறுவிக்க மாட்டாதாயிற்று; ஆகவே, கி-பி மூன்றாம் நூற்றாண்டிலுங் கடைச்சங்கம் மதுரையில் இருந்திலாமை தெளியப்படும்; படவே, கடைச்சங்ககாலம் கி-பி இரண்டாம் நூற்றாண்டில் அது முடிவெய்துதற்குமுன் நிகழ்ந்ததாகுமெனக் கடைப்பிடித்துணர்ந்துகொள்க. இவ்வாறு கி-பி மூன்றாம் நூற்றாண்டுமுதல் ஐந்தாம் நூற்றாண்டின் நடுவெல்லைகாறும் நிகழ்ந்த பல்வேறு மாறுதல் நிகழ்ச்சிகளை வரலாற்று முறையின் நன்காய்ந்துணராமற், 'சேரன் செங்குட்டுவன்' நூலாரும், அவரைப் பின்பற்றித் 'தென்னிந்திய சைன மத ஆராய்ச்சி' நூலாருங் கடைச்சங்கம் இருந்தது கி-பி ஐந்தாம் நூற்றாண்டிலேயாம் என்றுரைத்தவுரை உண்மைவரலாற்றுடன் மாறுகொள்ளும் போலியுரையாமெனஉணர்ந்துகொள்க.

இனிச், சோழன் கரிகாலன் காலத்தும் அதற்கு முன்னும் இருந்த மாமூலனாரென்னும் ஆசிரியர் அகநானூற்றிற்பாடிய,

"வெல்கொடித், துனைகாலன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவி அறைவாய்" (உருக) என்னுஞ் செய்யுளில் வடநாட்டிலிருந்த மோரிய அரசர் தென்னாட்டின் மேற் படையெடுத்துவந்த ஞான்று, 'மோகூரில்' இருந்த தமிழ் மன்னன் அவரைப் பணிந்து அவர்க்குத் திறைகொடாமை யின், அவனது ஊரின் வடவெல்லையில் அரணாய்த் தடைசெய் திருந்த மலைப்பாறையைக் குறைத்து மட்டமாக்கித் தாம் வரு தற்கு வழியுண்டாக்கினர் என்னும் வரலாறு கூறப்பட்டிருத் தலை, அவ் விருவரும் எடுத்துக்காட்டி, இதன்கட் குறிப்பிடப் பட்ட மோகூர் மன்னன் என்போன், சேரன் செங்குட்டுவனால் தோல்வியுற்ற 'பழையன் மாறனே' யாதல் வேண்டுமெனவும், அவ்வாறாகவே மாமூலனார் சேரன் செங்குட்டுவன் காலத்தவ ராகவும் பெறப்படுதலின் அவராற் சொல்லப்பட்ட மோரிய ரது படையெடுப்பு இச் சேரவேந்தன் காலத்திலேயே நிகழ்ந்த தாதல் வேண்டுமெனவும், கிறிஸ்து பிறப்பதற்கு முந்நூறு ஆண்டு களுக்குமுன் வடநாட்டில் அரசுபுரிந்த 'சந்திரகுப்த' அரசனே மோரியமரபுக்கு முதல்வனாகலின் அவனாவது அவன்றன் மகன் 'பிந்துசார'னாவது சேரன்செங்குட்டுவன் காலத்தில் தென்னாட் டின்மேற் படையெடுத்துவந்தா ரென்பது பொருந்தாதெனவும், கிறிஸ்துவுக்குப்பின் நான்காம் நூற்றாண்டிற் றுவங்கிய 'குப்த மரபுக்'கு முதல்வனான மற்றொரு 'சந்திரகுப்த'னின் மகனான 'சமுத்ரகுப்தன்' என்பவனே தென்னாட்டிற் காஞ்சிநகர் வரை யிற் படையெடுத்துவந்தமை வரலாற்றுநூல்களால் நன்கறியக் கிடத்தலின் இங்ஙனம் வந்த இக் குப்தமரபினரையே மாமூல

ஞரும் அவர் காலத்திருந்த ஏனைப் புலவர் சிலரும் பிழைபா டாக 'மோரியர்' என்று கூறினரெனவும், ஆகவே இக் குப்த மரபினர் படையெடுப்பைக் குறிப்பிட்ட மாமூலனாரும் அவ ரோடுடனிருந்த மற்றைக் கடைச்சங்கப்புலவரும் அவர் தமி ழாராய்ந்த கடைச்சங்கமுமெல்லாங் கி–பி நான்காம் நூற்றாண் டின் பிற்பகுதியிலேனும் ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியி லேனும் இருந்ததாகல் வேண்டுமெனவும் உரைநிகழ்த்தினர். இவை தம்மையாராய்ந்து இவருரைத்த இவ்வுரை பொருந்தா மை காட்டுவாம்.

முதற்கண் ஆராயற்பாலது, மோரியர் தமிழ்நாட்டின்மேற் படையெடுத்துவந்த ஞான்று அவரொடு பகைத்து அவரைப் பணியாமல் இருந்தோன் 'பழையன்மாறன்'றானே என்பதே யாம். ஆசிரியர் மாமூலனார் தாம் பாடிய அகநானூற்றுச் செய் யுட்கள் இரண்டில்மட்டும் (உருக, உஅக) 'மோரியர் தென்னாட் டின்மேற் படையெடுத்துவந்த' செய்தியினைக் குறித்திருக்கின் றார்; அவ்விரண்டுள்ளுங் மேலேகாட்டிய செய்யுளில் மட்டுமே மோகூர் மன்னன் அம்மோரியரைப் பணியாமை கூறினர்; இங் ஙனங் கூறியவழி வறிதே 'மோகூர்' என்று மொழிந்தனரே யன்றி, அம்மன்னன்பெயர் 'பழையன்மாறன்' என்று மொழிந் தனரல்லர். அங்ஙனமிருக்க மோரியர் வந்தஞான்று மோகூரில் அரசியற்றினோன் பழையன் மாறனே யென்று 'சேரன் செங் குட்டுவன்' நூலார் கூறுதற்குச் சான்றென்னை? இம் மோரிய ரது வரவினை அகநானூற்றிற் கூறிய (உகு) மற்றொரு புலவர் பரங்கொற்றனாராவது, அதனைப் புறநானூற்றிற்கூறிய (கஎரு) ஆத்திரையனாராவது அம்மோரியரைப் பகைத்துப் பணியா திருந்தோன் பழையன்மாறனே யென்று கூறினரா? அங்ஙனம் எதும் இல்லையே. அற்றன்று,

"பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றியன்ன" என்று மதுரைக் காஞ்சியுட் (ருOஅ, ருOகூ) சொல்லப்படுதலின், அப்போது

மோகூரிலிருந்தோன் பழையன்மாறனே என்பது பெறப்படுமா லெனின்; இம் மதுரைக்காஞ்சியுட் சொல்லப்பட்டது கொண்டு, அதனை யியற்றிய 'மாங்குடி மருதனார்' காலத்தில் மோகூரிலிருந் தோன் 'பழையன்' என்பதுமட்டும் பெறப்படுமே யல்லாமல், மோரியர் வந்தகாலத்தும் அவ்வூரிலிருந்தோன் பழையனேயென் பது பெறப்படாதாகலின், அவ்வாறு கொள்ளுதல் பொருந்தா தென மறுக்க. அஃதொக்குமாயினும், கரிகாற் பெருவளத் தான் காலத்திற்கும் முற்பட்ட 'தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன்' காலத்தில் மோகூரிற் 'பழையன்' என் னுஞ் சிற்றரசன் ஒருவன் இருந்தமை நுவலப்பட்டவாறுபோல வே, அப்பாண்டியனுக்கு ஒரு நூற்றாண்டுபிற்பட்டிருந்த 'சேரன் செங்குட்டுவன்' காலத்தும் மோகூரிற் 'பழையன்' என்பான் ஒருவன் இருந்தமை பதிற்றுப்பத்தின் சச, சகூ-ஆஞ் செய் யுட்களினும் ரு0-ஆஞ் செய்யுளின் பதிகத்தினும் நுவலப்பட்ட வாறென்னையெனின்; ஒருவன் தன்தந்தையின் பெயரைத் தன் மகற்கிட்டு வழங்குதல் பண்டுதொட்டு இத்தென்றமிழ்நாட்டின் கண் நடைபெற்றுவரும் வழக்கென்பது "சிறந்தோன்பெயரன் பிறந்தமாறே" என்பதனால் நன்குணரக்கிடத்தலின், மாங்குடி மருதனார்காலத்தில் மோகூரிலிருந்த 'பழையன்' பாட்டன் ஆவன் எனவும், சேரன் செங்குட்டுவன் காலத்தில் அதன்கணிருந்த 'பழையன்' அவற்குப் பேரன் ஆவனெனவும் பகுத்தறிந்து கொள்க. இவ்வாறு பகுத்தறியமாட்டாமையிற் 'சேரன்செங் குட்டுவன்' நூலாரும் அவரைப்பின்பற்றிய சமண்நூலாரும் அவ் விருவேறு 'பழையனை'யும் ஒன்றுபடுத்திச் செய்த குழப்பங் கள் சாலப்பல.

அற்றாயினும், "நான்மொழிக்கோசர்" என்பார் மோரிய ரோடு சேர்ந்து அவர்க்கு முற்படையாய்ப் போந்து 'மோகூர்ப் பழையனைத்' தாக்கினவரலாற்றை மேலெடுத்துக்காட்டிய செய் யுளில் மாமூலனார் கூறியிருத்தல்கொண்டும், அங்ஙனமே 'மது [illegible]' மாங்குடிமருதனார் கூறியிருத்தல் கொண்டும்

மோரியர் கோசரை முன்னணியாய் விடுத்துத் தாக்கியது மோகூரிலிருந்த பழையனையேயாம் என்று அச் ‘சமண்மத ஆராய்ச்சி நூலார்’ உரைத்தது பொருத்தமேயாமெனின்; அது பொருத்தமன்று. ஆசிரியர் மாமூலனார் தாம் பாடிய அகநானூற்றுச் செய்யுள் மற்றொன்றில் (உ அக),

“கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய விரவிற்கு” என மோரியர் வடுகரை முன்றுணையாய்க் கொண்டு வந்தனரென்று மொழிந்தாற்போல, அவர் கோசரையும் முன்றுணையாய்க்கொண்டு வந்தனரென யாண்டும் மொழிந்தார் அல்லர். ஏனைத் தமிழாசிரியராதல் அக்கோசரை மோரியர்க்குத் துணைவரென்றேனும், பழையன் மாறனை அவர் தாக்கினரென்றேனும் யாண்டுங் கூறக் காண்கிலேம். மற்று, அக்கோசர் “பழையன் மோகூர் அவையகம் விளங்கத் தோன்றின”ரெனவே மதுரைக்காஞ்சி புகலாநிற்கின்றது; அவர் பழையனுக்குப் பகைஞராய்ப் புகுந்தனரென்றால், அவனது அவையகம் அழியப்புகுந்தன ரென்றன்றோ கூறுதல் வேண்டும், அவ்வாறின்றி அவனது அவையகம் விளங்கப்புகுந்தனரென்று கூறுதல் ஒக்குமோ? மற்று அஃது அவர் அவனது அவையகம் விளங்கப் புகுந்தனரென் றுரைக்கும் பரிசினை உற்று நோக்கும் வழி, அக்கோசர் மோகூர்ப் பழையனுக்கு நண்பரேயல்லாமற் பகைஞரல்லரென்பது இனிது புலனாதலின், அவரை மோரியர்க்குத் துணைபோந்தாரென்பது பெரியதொரு பிழைபாட்டுரையாம். அற்றேல், மாமூலனார், “வெல்கொடித், துனைகாலன்ன” என்று பாடிய மேற்காட்டிய செய்யுளடிகட்குப் பொருளென்னையெனின்; “வென்றெடுத்த கொடியினையும், விரைந்துசெல்லுங் காற்றையொத்த ஒப்பனைசெய்த தேரினையும் உடைய கோசரது பழையதாய் முதிர்ந்த ஆலமரத்தின் கேடில் லாத கிளைகளின் கீழுள்ள அம்பலத்தின் கண்ணே, இனிய இசையைப்பிறப்பிக்கும் முரசங் குறுந்தடியால் அறையப்பட்டு ஒலிக்கப்,

ஓம்

# சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்

(இரண்டாம் பதிப்பு)

இது

பல்லாவரம், பொதுநிலைக்கழக குருவும்
'ஞானசாகர' ஆசிரியரும் ஆகிய

## மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம் என்னும்

மறைமலையடிகளால் இயற்றப்பட்டது

ஆரியர் இவ் இந்தியநாட்டுக்குள் வருமுன் நாகரிகத்தில் ஓங்கியிருந்த தமிழர்களின் வரலாறும், அவர்க்குள் சாதிகள் உண்டான வகையும், சாதிவேற்றுமைகளால் இப்போது அவர்கள் அடைந்திருக்கும் துன்பம் நிறைந்த நிலைமையும், அவற்றை அவர்கள் ஒழித்து ஒற்றுமையும் உயர்ச்சியும் அடைதற்குரிய வழிதுறைகளும் இதன்கண் தெளிவான தனித்தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. 108 பக்கங்கள் உள்ளது; வழுவழுப்பான வெள்ளைச் சீமைக்கடிதத்தில் அழகிதாக அச்சிடப்பட்டிருக்கின்றது; விலை ஒரு ரூபா.

### இதன் பொருளடக்கம்:


English Preface.

முதல் இயல்

பழைய வேதத்தில் சாதி இல்லை

பழைய சாதிவழக்கங்களின் மாறுதல் ௨, ௩, ௪-இருக்குவேத முதல் ஒன்பது மண்டிலங்களிற் சாதியும் சாதிப்பகுப்பும் இல்லை ௫-பத்தாம் மண்டிலத்திற் சொல்லப்பட்ட நாற்சாதியினரும் இறைவனுக்குப் பிள்ளைகள் ஆதல் ௫-நால்வேறு தொழில்கள்பற்றி அப் பிள்ளைகள் நாற்பாலாகச் சொல்லப்பட்டமையின் அவருள் ஏற்றத்தாழ்வின்மை ௯-௯-சுக்லயஜுர் வேதம், பிராமணங்கள், பன்னிரண்டு உபநிடதங்களின் காலமும் அவற்றுட் சாதி வேற்றுமை இன்மையும், ஓர் அடிமைப் பெண்ணின் மகனை கவஷா என்பவரின் உயர்வும் க௦-க்ஷத்திரிய வைசிய சூத்திர வகுப்பினர் வேதங்களை ஆக்கியோர் ஆதல் கக-வேத உபநிடதங்களிற் சொல்லப்பட்ட க்ஷத்திரிய வைசிய ரென்போர் தமிழ வேளாள அரசரும் வணிகரும் ஆதல் க௨-க௩-இழிந்த இயற்கையுடையோர் உயர்ந்தசாதியாராகாமை க௩-பூணூல் உண்டான காலமும் அதனை அணிவதன் கருத்தும் க௪.

இரண்டாம் இயல்

பழைய உபநிடதங்கள் இதிகாசங்களில் சாதி இல்லை

ஒவ்வொரு சாதித்தொழில் அவ்வச் சாதிக்கே உரியதாகாமையும், ஒரு சாதி மற்றொருசாதியிற் கலத்தலும் க௫-ஞானோபதேசங்கள் அரசர்களாற் பார்ப்பன முனிவர்க்குச் செய்யப்பட்டமையும், சூத்திரன் ஆக்கிய உணவைப் பார்ப்பனர் உண்டமையும் க௬-பிறப்பினால் அன்றித் தொழில்வேற்
[illegible]ற் சாதி வகுக்கப்பட்டதனைப் பற்றிப் பாரதத்திற் பாரத்துவா
றுமையா[illegible] நடந்த உரையாட்டு [illegible]-க௮-சத்தியகாமன் பார்ப்
சர்க்கும் பிருகுவுக்கும் [illegible]ான் மிக்கவரே உயர்ந்தவரென நாட்
பனன் ஆனமை க௮-க௯-ஒழுக்கத்[illegible]
டும் வஜ்ரசூசி உபநிடத மொழிபெயர்ப்பு க௯-௨௦.

மூன்றும் இயல்

மிருதிகளிற் சாதிப்பிரிவும் ஒழுக்கம் பற்றியதே

பார்ப்பனர் க்ஷத்திரியர் செய்யத்தகாத தொழில்களைச் செய்யின் அவர் சூத்திரர் ஆதல் ௨௩-'சூத்திரர்' என்னுஞ் சொற்குப் பொருள் ௨௪-௨௫-சைவவேளாளர் சூத்திரர் அல்லாமை ௨௫-பொருள் தெரியாமற் சைவர் தம்மைச் 'சற்சூத்திரர்' என்றலின் புன்மை ௨௬-சைவவேளாளர் பிறசாதியாரைத் தாழ்த்தினமையால் வந்த கேடு ௨௭, ௨௮-சாதிவேற்றுமை யில்லாத ஆங்கிலரின் முன்னேற்றம் ௨௯-நாற்சாதிப்பகுப்பு ஆரியரால் உண்

டானதன்று ௩௦-தமிழர் எல்லாருங் கருநிறத்தினர் அல்லர் ௩௦-௩௧-இந்திய நாட்டுக்கு வரும்முன் ஆரியர் ஆடுமாடுமேய்த்தமை ௩௧-௩௨-ஆரியர் இமயமலைக்கு வடக்கே நெடுந்தொலைவில் இருந்தமை ௩௩-௩௪.

## நான்காம் இயல்

### தொல்காப்பியத்திற் சாதிப்பிரிவு தொழில்பற்றியது

உழவுதொழில் தமிழர்க்கே உரித்தாதலும், அத்தொழிலைச்செய்த வேளாளரிலிருந்து சாதிப்பிரிவு உண்டானமையும் ௩௫-௪௨-நாகரிகத்தால் உயர்ந்தோர் எல்லாச் சாதியாரினுந் தலைவராதல் ௪௩-௪௪-தமிழ்நாட்டில் மருதநிலத்து வேளாளராற் சாதிவேற்றுமை வேர் ஊன்றினமை ௪௫-தமிழர்கள் முதன்முதல் வேட்டுவவாழ்க்கையில் இருந்தமை ௪௬-புலால்உணவு கொள்ளாதாரும் கொள்வாரும் இருபிரிவினர் ஆனமை ௪௭-தூய்மை, கல்வியறிவு, கடவுள்வழிபாடு, மகளிரொழுக்கம் என்பவற்றாற் பல இனங்கள் பிரிந்தமை ௪௮-௪௯-ஒழுக்கத்தில் வழுவினோர் உயர்ந்த சாதியாராகாமையும், உயர்ந்தோர் வேற்றுமையின்றிக் கலந்தமையும் ௫௦-௫௨-மக்களுட் பிறப்பு எல்லார்க்கும் ஒத்தலும், தொல்காப்பியனார் சாதி என்னுஞ் சொல்லை மீன் இனங்கட்கு வழங்கினமையும் ௫௩-௫௪.

## ஐந்தாம் இயல்

### சைவ வைணவ நூல்களிலுஞ் சாதிவேற்றுமை இல்லை

சைவசமய ஆசிரியர்களான மாணிக்கவாசகர், அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர் சாதிவேற்றுமை ஆகாதென்றதும், எக்குலத்து அடியார்களையும் பாராட்டியதும் ௫௫-௫௮-சிவபிரான் சாதிவேற்றுமை கருதாது அருள்வழங்கலின் வரலாறுகள் சில ௫௮, ௫௯-வைணவ சமயத்துள்ளும் சாதிவேற்றுமையின்மையும், ஆழ்வார்களின் பிறப்பும் ௫௯-௬௧-சிவனடியார்பாற் குற்றம் ஆராயாது அவரை வணங்குதல் ௬௧-௬௩.

## ஆறும் இயல்

### உலக வழக்கிலும் சாதி இல்லை

மகளிரின் நிலையாற் சாதியின்மையும், சைவமடங்களின் தீதும் ௬௪-௬௫-உண்மைச்சைவர்: போலிச்சைவர் ௬௬-பார்ப்பனர் சைவரையும் பிறரையுஞ் சூத்திரர் எனல் ௬௭, ௬௮-எல்லாச் சாதியினும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் உண்மை ௬௮-௬௯-அந்தணரின் உயர்வு ௬௯-௭௧-பத்திநெறி உலகநெறி வேறென்றலின் புன்மை ௭௨-௭௩-ஒவ்வோரினத்தாருந் தம்மை உயர்ந்தோரெனல் ௭௩-செல்வர்கள் அதிகாரிகள்பாற் சாதியிழிபு பாராமை ௭௪-சாதிக்கலப்புப் பண்டுதொட்டு உண்மை ௭௫-௭௬.

## ஏழாம் இயல்

### சாதி வேற்றுமைகளை ஒழிக்கும் வழிகள்

முதன்முதற் சாதிவேற்றுமைகளை உண்டாக்கின புலால் உண்ணாமை, தூய்மை, கல்வி, கடவுள்வழிபாடு என்னும் மூலங்களைக்கொண்டே அவ்வேற்றுமைகளை ஒழித்தல் ௭௭; ௭௮-ஊனுணவுவிட்டாரைச் சைவர் ஏற்றலின்நன்மையும், ஏலாமையின் தீமையும் ௭௮-௮௧-புதிய இரத்தக்கலப்பு இன்மையாற் பழைய சைவர்குலம் குன்றல் ௮௧-சாதிவேற்றுமை இல்லா ஆங்கிலரின் சிறப்பும், அஃதுடைய தமிழரின் இழிப்பும் ௮௨-துலுக்க அரசராற் சாதியொழிந்த கொடுமைகள் ௮௨-௮௫-கலப்பில்லாத் தனிச்சாதி எங்கும் இன்மையும், சாதிக்கலப்பின் நன்மையும் ௮௫-௮௬-சைவர் தம்முள் இழிந்தாருடன் [illegible]ல் ௮௬-தாழ்த்தப்பட்டவகுப்பினர்கிறிஸ்துவரால் திருத்தப்பட்டுக் கிறிஸ்துவராதல் ௮௭, ௮௮- சைவரென்போரிற் பலர் சைவரல்லாமை ௮௯-செல்வர்கள் மேற்சாதியாராதல் ௯௦-தென்னாட்டுத் திருக்கோயில்களில் தாழ்ந்தவகுப்பார் சிலர் விடப்படாமையால் நிகழுந் தீது ௯௦-௯௩-சாதிவேற்றுமையால் தமிழ்மாதர் படுங் கொடுந்துன்பங்களும் அவற்றை ஒழிக்கும் வகையும் ௯௩-௯௫-பிறசாதியாரில் தூயராய் வருவார் செயற்பாலது ௯௬.

வேண்டுவோர் சென்னைக்கு அடுத்த பல்லாவரம், பொதுநிலைக் கழக புத்தகசாலைக்கு எழுதுக.

---

T. M. Press, Pallavaram.